தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY
விலை - 100/= | இதழ் - 83 | 10.11.2024

# அருகிவரும் நீர் வளத்தை பாதுகாப்போம்





இலங்கையின் ஆறுகள் 03


நிறுத்தி வைத்தல் வரி 10


இலங்கையின் கடல் வளம் 14


உலகின் தட்ப வெப்ப மாற்றங்கள் 18


பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# அருகிவரும் நீர் வளத்தை பாதுகாப்போம்

எம்.எப்.எம் இக்பால் – யாழ்ப்பாணம்



நீர் என்பது உயிரின் ஆதாரமாகும். அது இயற்கையின் கொடையாகும். நீர் இல்லையேல் மண் காய்ந்துவிடும். உணவு உற்பத்தி இருக்காது. மண்ணும் காற்றும்கூட நீரின்றேல் வறண்டு போய்விடும். ஆக, எல்லா இயற்கை வளங்களுக்கும் மனித வளத்திற்கும் தாய் வளம் நீராகும். நீர் பல வழிகளிலும் மனிதனுக்குப்பயன்படுகிறது. எமது உடலின் உள்ளேயும் அதிகளவு நீருள்ளது. குருதி, நிணநீர், பாய்பொருள் முதலியவற்றின் கூறாகவும் நீர் அமைந்துள்ளது. முன்னைய காலங்களில் தூய நீருக்கான பற்றாக்குறை ஒரு போதும் இருந்ததில்லை. ஆனால் தூயநீரின் வளம் உலகில் மிக வேகமாகக் குறைந்துகொண்டு செல்வது அவதானிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய போக்கு கட்டுப்படுத்தப்படாது போகுமானால் எதிர்காலத்தில் விவசாயம் மற்றும் மனிதனின் தனிப்பட்ட பாவனைக்கான தூயநீருக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்படும் ஆபத்தேற்படலாம். புவியின் மேற்பரப்பில் பெரும்பகுதி நீரினால் மூடப்பட்டுள்ளது கடல் உட்பட அனைத்து நீர்நிலைகளிலும் இருந்து நீர் ஆவியாகி மேலே சென்று முகிலாகி மழையாகப் பெய்து, மீண்டும் நிலத்தை வந்தடையும் செயற்பாடு தொடர்ச்சியாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. நீர் வட்டம் தொடர்ச்சியாக நடந்து கொண்டேயிருக்கிறது. நீர்க்கோளத்தை விட்டு நீர் எங்குமே சென்று விடுவதில்லை. அவ்வாறிருக்கையில் உலகம் தூய நீருக்கான பற்றாக்குறையை எதிர்நோக்குவது ஏன்? மனிதனின் செயற்பாடுகளே இந்த ஆபத்துக்குக் காரணமென நீரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். காடுகள் மெருமளவில் அழிக்கப்படுதல், நீர் மாசடைதல், நீரின் அதிகரித்த பாவனை ஆகியனவே தூய நீருக்கான பற்றாக்குறை அதிகரிக்கக் காரணமென அவர்கள் தெரிவிக்கின்றனர். மனித செயற்பாடுகளின் விளைவினால் புவி உஷ்ணமடைந்து செல்வதால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயருகிறது. இதனால் கடல்நீர் புவியினுள் பிரவேசிப்பதன் விளைவாக தூயநீரின் விகிதம் குறைந்து கொண்டே செல்கிறது. இது போதாதென்று மறுபுறத்தில் இரசாயனப் பதார்த்தங்களின் பாவனையினால் தூயநீர் படிப்படியாக மாசடைந்து செல்கிறது. உலகில் 70 வீத பரப்பளவு நீர் இருந்தாலும் அதில் 97.5 வீதம் கடலில் இருக்கும் உவர் நீர்தான். மீதி 2.5 வீத அளவுக்குத்தான் நிலத்தடி நீர் உள்ளது. இதிலும் 224 வீதம் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகளாகவும் பனித்தரையாகவும் மாறிப் போயுள்ளது. எஞ்சிய 0.26 வீத நீரைத்தான் உலக மக்களனைவரும் பகிர வேண்டும். அண்மைய புள்ளி விபரங்களின்படி உலகளவில் 250 கோடி மக்கள் போதியளவு சுத்தமான நீரை அல்லது நீர் வளத்தை அனுபவிக்க முடியாத நிலையிலுள்ளனர். அவர்களில் 70 சதவீதத்தினர் ஆசிய நாடுகளிலேயே உள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் நீர் மாசடைதலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை போர் மற்றும் வன்முறைகளால் இறந்தோரின் எண்ணிக்கையை விட அதிகமாகும் என்று குறிப்பிடப்படுகின்றது. குடிசனப் பெருக்கம், கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய விரிவாக்கம் முதலியவற்றின் வளர்ச்சி வேகம் நீரின் தேவையை அதிகரிக்கச் செய்துள்ளது. அதனால் தான் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் 'மூன்றாம் உலகப்போர் ஒன்று நடந்தால், அது நீருக்கான ஒரு போராகவே இருக்கும் அன்றி வேறு எதற்காகவும் அல்ல" என்று கடந்த 20 வருடங்களாக எச்சரிக்கின்றனர். இதற்கான அறிகுறிகள் இன்று பெரியளவில் காணப்படுகின்றன.

1993ஆம் ஆண்டு முதல் மார்ச் மாதம் 22ஆம் திகதியை உலக நீர்வள தினமாக அறிவிக்கப்பட்டு இன்றுவரை கொண்டாடித்தான் வருகிறோம். ஆனால் ஒவ்வோர் ஆண்டும் உலகின் பல கோடி மக்கள் தண்ணீரின்றி திண்டாடி வரும் நிலையும் எந்த வகையிலும் அகலவில்லை. ஐ.நா. சபை கடந்த 1992ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த கூட்டத்தை கூட்டியது. கூட்டத்தில், நீர்வள பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதை மக்களிடம் உணர்த்த 'உலக நீர்வள தினம் கொண்டாடப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஆண்டுதோறும் மார்ச் 22ஆம் திகதி உலக நீர்வள தினம் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டேயிருக்க அவர்கட்குத் தேவையான குடிநீர் தேவையும் அதிகரிக்கிறது. வருடாந்தம் சனத்தொகை 90 மில்லியனால் அதிக- ரித்து செல்கின்றது. தேவையைப் பூர்த்திசெய்ய இயலாத நிலையில் கிடைக்கும் நீரைக் குடிக்கும் நிலைக்கு பல பிரதேச மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பலவித நோய்கட்கு ஆளாகின்றனர். மனிதனுக்கான நீரை வழங்கும் ஜீவநதிகள் பல இருந்தும் பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம். இவ்வாறான செயற்பாடுகளால் நீரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் இன்று வளர்முக நாடுகளில் 80 சதவீதமானோர் நீர் சார்ந்த நோய்களால் பலியாகின்றனர். சுத்தமான நீரைப் பெறமுடியாமல் வருடாந்தம் 5 வயதிற்கு உட்பட்ட 18 இலட்சம் சிறுவர்கள் பலியாகிறார்கள். அசுத்தமான நீரால் ஏற்படும் நோய்களான வயிற்றுப்போக்கு, வாந்திபேதியால் வருடத்துக்கு 22 இலட்சம் பேர் வரை இறப்பதாகக் கூறியுள்ளார்கள். அசுத்தமான நீர் இவ்வாறு மக்களைப் பலியாக்குகிறது நீரில் பக்றீரியாக்கள் இருப்பதால் டயரியா. தைபோய்ட், கொலரா, மஞ்சள் காமாலை, போலியோ, குடற்

புழுக்கள் போன்ற நோய்கள் வரும் என்பதை நாங்கள் எல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆயினும் எத்தனை பேர் இதனை சரியாகக் கடைப்பிடிக்கிறோம்? நீருக்கான நெருக்கடியில் மனித நடவடிக்கைகளும் அடங்கியுள்ளன. இவற்றை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் கைக்கொண்டு வந்தால் உலகமும் உயிர்களும் வாழும் மனிதர்களுக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் உயிர் வாழ்வதற்கு சுத்தமான நீர் மிகவும் அவசியம் என சிறுவயது முதலே படித்து வருகிறோம். நாம் பருகுவது சுத்தமான நீராக இருக்க வேண்டும். நன்கு கொதிக்க வைத்து ஆற வைத்து எடுத்த நீர் அல்லது பில்டரில் வடிகட்டிய நீர் குடிப்பதற்கு ஏற்றது. குடிநீருக்காக பல மைல் தூரம் குடத்துடன் நடந்து செல்லும் சனங்கள் எத்தனையோ பேர் கிராமங்களில் இருப்பதை இன்றும் காண்கிறோம். தொழிற்சாலைகள் தமது கழிவுகளை ஆறுகள், குளங்களில் கொட்டுவதால் இரசாயன மாற்றமேற்பட்டு நீரின் தன்மை மாற்றமடைகிறது. இதனால் பயன்பாட்டுக்கு உகந்த நிலையை நீர் இழக்கின்றது. நீர் வளப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் அதை மக்களிடம் உணர்த்தவுமென உலக நீர்வள தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்ற ஐ.நா. சபையின் தீர்மானத்துக்கமைய 1993 முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 22 இல் உலக நீர்வள தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டியதும் நீர் ஆதாரங்களைக் காக்க வேண்டியதும் மனித சமுதாயத்தின் தார்மீகக் கடமையாகும். குடிசனப் பெருக்கம், கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய விரிவாக்கம் முதலியவற்றின் வளர்ச்சி வேகம் நீரின் தேவையை அதிகரிக்கச் செய்துள்ளது. அதனால் தான் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் ‘மூன்றாம் உலகப் போர் ஒன்று நடந்தால், அது தண்ணீருக்கான போராக இருக்கும் என்று எச்சரிக்கின்றனர். இப்போது, உலகில் உள்ள 80 நாடுகளில் 40 சதவீத மக்கள் சரிவர தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். 110 கோடி மக்கள் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். இப்படியே போனால், இன்னும் சில நூற்றாண்டுகளில் உலகமே பாலைவனமாக மாறிவிடும். குடிநீர் மாசுபடுவதாலும், வறட்சியாலும் எதிர்காலத்தில் உலகம் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது. எனவே, எதிர்காலத்தில் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு சந்திரன், செவ்வாய் கிரகத்தில் மனிதன் உயிர் வாழ முடியுமா? தண்ணீர் உள்ளதா? என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். நீர் பெறுவதற்கு முக்கிய காரணம் மழை மழை வருவதற்கு முக்கிய காரணம் மரம், நாம் காடை வெட்டி நகரமய படுத்துவதால் எமக்குத்தான் தீமை என்பதை யாரும் புரிந்து கொள்வது கிடையாது. காடு வளர்ப்போம் நீர் காப்போம் எம் உயிர் காப்போம், எம் அடுத்த சந்ததியினர் வாழ வழி சமைப்போம்.

# இலங்கையின் ஆறுகள்

நாட்டின் மத்திய உயர்நிலத்தில் இருந்து ஊற்றெடுத்துப் பாய்கின்றன. 1959 ஆண்டு ஆய்வொன்றின் படி இலங்கையில் மொத்தம் 103 ஆறுகள் காணப்படுகின்றன. இவற்றுள் 10 ஆறுகள் முக்கியமானவையாகும். மகாவலி கங்கை மிக நீளமான ஆறாகும். இலங்கையின் முக்கிய ஆறுகளில் கலா ஓயா மாத்திரமே உயர்நிலமல்லாத குளம் ஒன்றில் இருந்து ஊற்றெடுத்துப் பாய்கிறது. இலங்கையின் ஆறுகளில் களு ஆறு, களனி ஆறு, ஜின் ஆறு, நில்வல ஆறு, மகாவலி கங்கை என்பன வெள்ளப்பெருக்கு அபாயத்துக்கு உட்பட்டவையாக கருதப்படுகின்றன.

மகாவலி ஆறு அல்லது மகாவலி கங்கை இலங்கையில் உள்ள ஆறாகும். இது பீதுறுதாலகால இருந்து ஊற்றெடுத்து திருகோணமலையில் கடலில் சேர்கின்றது இது இலங்கையின் மிக நீளமான ஆறாகும், மேலும் நீரோட்டத்தின் படி முதலாவது பெரிய ஆறும் ஆகும். இந்த ஆற்று நீரைப் பயன்படுத்தி வேளாண்மையும் நீர்மின் உற்பத்தியும் பெருமளவில் நடைபெறுகிறது. சுமார் ஆயிரம் சதுர கிலோ மீட்டர் நிலம் இவ்வாற்று நீரின் மூலம் பயிரிடப்படுகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. மகாவலி கங்கை என்பது சிங்கள மொழியில் மணற்பாங்கான பெரும் ஆறு எனப் பொருள் தரும். இதன் நீரேந்து பகுதியில் சராசரியாக ஆண்டுக்கு 22282 மில்லியன் கனமீட்டர் மழை பெய்கிறது, இதில் சுமார் 40 சதவீதமான நீர் கடலை அடைவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு 10237 சது.கி.மீ. சதுர கிலோமீட்டர் நீரேந்துப்பகுதியைக் கொண்டுள்ளதோடு இது இலங்கையின் முதலாவது பெரிய நீரேந்துப் பகுதியாகும்.

இலங்கையின் முக்கிய நீர்மின் திட்டங்கள் மகாவலியை மறித்துக் கட்டப்பட்ட அணைகள் மூலமே செயற்படுத்தப்படுகின்றன. இவற்றில் முக்கிய நீர்மின் திட்டங்கள்:

- மேல் கொத்மலை நீர் மின் திட்டம்
- கொத்மலை நீர் மின் திட்டம்
- உக்குவளை நீர் மின் திட்டம்
- விக்டோரியா நீர் மின் திட்டம்
- இரந்தெனிகலை நீர் மின் திட்டம்
- இரந்தம்பை நீர் மின் திட்டம்
- போவதன்னை நீர் மின் திட்டம்
- உக்குவளை நீர் மின் திட்டம்

இவற்றுக்கு மேலதிகமாக பல நீர்பாசனத் திட்டங்களும் அவற்றில் அமைக்கப்பட்டுள்ளன:

- மினிப்பே
- பொல்கொல்லை
- உல்கிட்டியஃரக்கிந்தை
- மாதுரு ஓயா
- உலகின் முக்கியமான அயனப் பாலைவனப் பகுதி சகாராவும் அதன் தொடர்ச்சியும் ஆகும். அரேபியப் பாலைவனம், தார் பாலைவனம், கலகாரி, மேற்கு



ஆஸ்திரேலியப் பாலைவனம் அடகாமா மற்றும் கலிபோர்னியா பாலைவனம் ஆகியவை அயனப் பாலைவனங்களாகும். இங்குள்ள தாவரங்கள் வறட்சியைத் தாங்கக் கூடியனவாக உள்ளன. அதற்கேற்ற வடிவமைப்புகளைக் கொண்டு இருக்கின்றன. குறுகிய இலைகள், பச்சையம் உள்ள தண்டுப்பகுதி, பரவி ஆழமாகச் செல்லும் வேர்கள் பிற உயிரினங்களிடமிருந்து காத்துக் கொள்வதற்காக சுனைகள் சிறு

தொடர்ச்சி 19 ம் பக்கம்...

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# எதிர்பார்ப்புக்கள்

மக்களின் நிலைபெறான பொருளாதார அபிவிருத்திக்கு புதிய அரசும், அமையப் போகின்ற பாராளுமன்ற அமைச்சர் குழுக்களும் வலு சேர்க்குமா ? என்கின்ற கேள்வி மக்களிடையே பெரிதும் தொக்கி நிற்கின்றது.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டெழும் திசையில் பயணித்தாலும், ஏழைகள் மற்றும் பாதிப்புறும் நிலையில் வாழுகின்ற மக்கள் ஆகியோர் மீது பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுத்திய தாக்கத்தினை தணிப்பதற்காக உறுதியான முயற்சிகள் முக்கியமானவை, இதனுடன் காத்திரமான, நம்பகமான, கட்டமைப்பு சார் நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளும் தொடரப்பட வேண்டும் . ஆனால்

வருகின்ற பாராளுமன்றத் தேர்தல் மக்களிடையே ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி இருப்பது போல, புதிய அமைச்சருடைய ஆசனங்களில் அமர போகின்றவர்கள் மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக நடைமுறைப்படுத்தப் போகின்ற திட்டங்கள் தொடர்பான விளக்கங்களுக்காகவும் மக்கள் இப்பொழுது காத்திருக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் பொருளாதார நெருக்கடிகளும், மக்களை அரசியல் தவிர்ந்து தமது பொருளாதார நலன்களை முதலில் உற்று நோக்குவதற்கு தூண்டி இருக்கின்றன என்று தான் சொல்ல வேண்டும். அந்த வகையில் மக்கள் எதிர்பார்க்கின்ற பொருளாதார நலன்கள் தொடர்பான திட்டங்கள் சரிவர நிர்வகிக்கப்படுமா ? அல்லது கடந்த காலங்களைப் போல இழுத்தடிப்புகளும், வரிசைகளும், என்று நிர்ப்பந்திக்கப்பட வேண்டிய சூழலுக்குள் தள்ளப்படுவோமா? என்கின்ற கேள்வி மக்களிடம் எழுந்திருக்கின்றது..

நிற்க, இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளும் அவற்றின் நிலை பெறாதன்மைகளும் மக்களுக்கு எந்த வகையில் மாற்றத்தை அளிக்கப் போகிறது என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

பேரினப் பொருளியல் உறுதித் தன்மைக்கு பங்களிப்புச் செய்கின்ற மறுசீரமைப்புகளை பேணுதல் மற்றும் இரண்டாவது, தனியார் முதலீடுகளை தூண்டக் கூடிய மற்றும் முதலீட்டு உள் வருகையை தூண்டக்கூடிய மறுசீரமைப்புகளை துரிதப்படுத்துதல்,

இவை பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையை குறைத்தல் ஆகியவற்றிற்கு முக்கியமாகும்."

குடிமக்களின் நலனில் அக்கறை செலுத்துகின்ற ஒரு அரசு மக்கள் நலனுக்காக இவற்றை செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை. நியாயமான ஒன்றுதான். ஆக, மக்களது எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக அவர்களது அடிப்படை மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்பான விடயங்களில் அரசு கவனம் செலுத்துமா? பொருளாதார மேம்பாட்டுக்கு புதிய அரசின் திட்டங்கள் எப்படி இருக்க போகிறது? வருங்காலத்தில் அமையப் போகின்ற பாராளுமன்ற அமைச்சரவையில் மக்களுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற நிறைவேற்றப்படுமா? அல்லது காலம் காலமாக நடைபெற்ற இழுத்தடிப்புகளும் ஏமாற்றுக்களும் தான் மக்களுக்கு மிஞ்சுமா? என்பது போன்ற மக்களின் கேள்விகளுக்கு உரிய தரப்பில் உள்ளவர்கள் சரியானபதிலளிப்பார்களா?

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சுற்றுச்சூழலை பாதுகாப்பததிலும் வளர்ப்பதிலும் இலங்கை நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் தொடர்பான நிலையான தேசிய அபிவிருத்திக்கான ஒரு உறுதியான அம்சத்தை உருவாக்கும் கொள்கைகளையும் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது" என ஜெனீவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதி, தூதுவர் ஏ.எல்.ஏ. அஸீஸ் அவர்கள் கூறினார்.

ஜெனீவாவில் 2019 ம் ஆண்டு 'மக்கள் மற்றும் உலகின், நீருக்கு கீழ் வாழும் உயிரினங்களின் பாதுகாப்பு 'என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்ற உலக வனவிலங்கு விழா கொண்டாட்டத்தில்(World Wildlife Day) உரையாற்றிய தூதுவர் அஸீஸ், "இந்த சந்தர்ப்பத்தில், கொழும்பில் 23 மே முதல் ஜூன் 3 வரை நடைபெறவுள்ள வன விலங்குகள் மற்றும் தாவரங்களின்(CITES) அழிந்து வரும் இனங்கள் மீதான சர்வதேச வர்த்தக உடன்படிக்கை அங்கத்துவ நாடுகளின் மாநாட்டின் 18 வது கூட்டத்தினை நடத்தவுள்ளது இலங்கைக்கு பெருமை தருகிறது" என்று கூறினார்.

"மாநாட்டில் கிடைக்கப்பெற்ற அதிகப்படியான ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் உயிரினங்கள் பற்றிய பரிந்துரைகளில் நாம் திருப்தியடைகிறோம், இது இன்றுவரை CITES இன் வரலாற்றில் நடைபெற்ற மாநாடுகளில் மிகப்பெரியதாக அமையவுள்ளது. மாகோ சுறா(Mako Shark), ஆப்பு மீன்(Wedgefish) மற்றும் கித்தார் மீன்(Guitarfish) ஆகியவற்றை பாதுகாப்பத்திற்கான பரிந்துரைகள் சுவாரஸ்யமாக உள்ளன. வரவிருக்கும் மாநாட்டில் இந்த 3 திட்டங்களுக்கும் இலங்கை இணை-அனுசரணை அளிப்பது பெருமையளிப்பதாகவும் இந்த மாநாடு ஒரு கார்பன் உணர்திறன்(Sensitivity) முறையில் நடத்தப்படும்" என்றும் அவர் கூறினார்.

இலங்கையானது ஒரு தீவு என்ற வகையில் நிலம் மற்றும் நீருக்கு கீழான இருவகை செழிப்பான பல்லுயிர்களுடன் கூடிய நாடாகும். அங்கு ள்ள மக்கள் தொகையின் கணிசமான பகுதியின் வாழ்வாதாரங்கள் கடல், நதிகள் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களுக்கிடையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. 'நீருக்கு கீழே வாழ்வதற்கான சவால்கள் உண்மையில் நம் உலகத்துக்கும் அதன் மக்களுக்கும் சவாலாக இருந்தன' என்ற கருத்தை இலங்கை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது என்று தூதுவர் அஸீஸ் குறிப்பிட்டார்.

உலகளாவிய கண்ணோட்டத்திற்கு அமைய, பல்வேறு சர்வதேச கருவிகளின் உதவியுடன் நீருக்கடியிலான வாழ்க்கையை பாதுகாக்கும் உறுதிப்பாட்டில் இலங்கை நிலையாக உள்ளது. கடல் சுத்தம் தொடர்பான செயலாற்றுகை, சர்வதேச பவள பாறைகள் முன்முயற்சி, பொதுநலவாய சுத்தமான சமுத்திரங்கள் கூட்டமைப்பு, கடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நீர் சார் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும், மேலும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் பிரான்ஸ் உடன் செய்யப்பட்ட பிரகடனம் என்பன இலங்கை பங்குதாரராகவிருக்கும் உலகளாவிய முன்முயற்சிகளில் சிலவாகும். அத்துடன், சதுப்பு நில சீரமைப்பு சம்பந்தமான பொதுநலவாய நீல சாசன செயல் குழுவில் இலங்கை முன்னுதாரணமாகவும் திகழ்கிறது எனவும் கூறினார்.

2019 க்கான உலக வனவிலங்கு தினக் கொண்டாட்டம், ஜெனீவாவில் ஊஐவநுளு செயலகம், ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி பற்றிய மாநாடு(UNCTAD), ஐரோப்பாவுக்கான பொருளாதார ஆணையம்(Economic Commission for Europe), ஐ.நா சுற்றுச்சூழல் அமைப்புத்திட்டம் (UN Environmental Programme) மற்றும் ஜெனீவா சூழல்வலையமைப்பு(Geneva Environment Network) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த அமைப்புகளிலிருந்தும், உலக வர்த்தக அமைப்பிலிருந்தும்(World Trade Organization) வந்த உறுப்பினர்கள் தொடர்ந்து வந்த கருப்பொருள்கள் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நலன்களின் சமமான பகிர்வு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு கார்பன் உணர்திறன் தொழில் நுட்பம் மற்றும் வர்த்தக பங்களிப்பு, மற்றும் அருகிவரும் இனங்களின் வர்த்தகத்திற்கு எதிரான வலுவான தடுப்பு நடவடிக்கைகள் என்பன மூலம் தொடர்ந்து எழும் பொருளாதார நன்மைகள் இந்த நிகழ்வில் நிகழ்வின் கலந்துரையாடல்களில் கணிசமான




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** கைத்தொழில் புரட்சி என்றால் என்ன? இலங்கையிலும் அத்தகைய புரட்சி ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா?

**பதில் -** 1750-1850ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உலகளவில் ஏற்பட்ட மிகப்பெரிய தொழில்நுட்ப, பொருளாதார, நாகரிக மாற்றங்களைக் குறிக்கும். தொழிற்புரட்சி முதலில் இங்கிலாந்தில் தோன்றியது. பின்னர் 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் பரவியது. செருமனியில் 1871இல் பேரரசு நிறுவப்பட்ட பின்னரும், அமெரிக்காவில் உள்நாட்டுப் போருக்குப் பின்னரும், உருசியாவில் 1917ஆம் ஆண்டுக்குப் பின்னரும் தொழிற் புரட்சி தொடங்கியது. இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் 20ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி தொடங்கியது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே உலகெங்கும் தொழிற்சாலை முறை தோன்றியது.

இது இப்படி இருக்க இலங்கையின் கைத்தொழில் தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசும் தயாராக இருக்கின்றது. அவற்றில்

கைத்தொழிலதிபர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை தயாரித்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயல்முறையை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றை தயாரித்தல்

ஏற்றுமதியுடன் தொடர்புடைய செயல்முறையை பலப்படுத்துவதற்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல்

தற்போதுள்ள கைத்தொழில்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்துதல் மற்றும் புதிய கைத்தொழில்துறை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்

வீழ்ச்சியடைந்துள்ள கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.

உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்களைப் பாதுகாத்தல் மற்றும் பலப்படுத்துதல்

ஏறாவூரில் ஆரம்பிக்கப்படவுள்ள கைத்தொழில் பூங்காவிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

கனிய வளங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நாட்டின் உற்பத்தி செயல்முறையை பலப்படுத்துவதற்காக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளல். போன்ற பல திட்டங்கள் அடங்கியுள்ளன. இலங்கையிலும் கைத்தொழில் புரட்சி ஒன்று உருவாகும் என்று எதிர்பார்ப்போம்.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

**எலக்சன் நேரமும் வேலை மினக்கெட்டு வரிசையில நிண்டு மொக்கன் மோடனுக்கெல்லாம் வோட்டுப் போட்ட மோட்டு வேலை எல்லாம் செய்திருக்கிறம். அத மாதிரி பேந்து உந்தக் கோல்களில கலியாணம் காட்சி எண்டு செய்யத் துடங்கின பிறகு சோத்து வரிசையில பிச்சைக்காரர் மாதிரி தட்டேந்தி வரிசையில நிக்கப்பழகி இருக்கிறம்.**

# எங்கட ஆச்சி



**காரைக்கவி கந்தையா பத்மானந்தன்**

வீட்டம்மா இண்டைக்கு விடியவே கத்த வெளிக்கிட்டா. தும்புத்தடியும் கையுமா நிண்டு கொண்டு உங்க எல்லா இடங்களிலையும் பெற்றோல் குடுக்கினமாம். போய் அடிக்கிறதை விட்டுப்போட்டு இன்னும் என்ன குறட்டை விட்டுக்கொண்டு இருக்கிறியள். கெதியாத் தேத்தண்ணியை ஊத்திப்போட்டுப் போய்ப் பெற்றோல் வாங்கிற அலுவலைப்பாருங்கோ எண்டா.

இதென்னடா பிரகண்டமாப் போச்செண்டு போய் வரிசையில ஒரு மூண்டு மணித்தியாலங்கள் நிண்டு ஒரு மாதிரி பெற்றோலை அடிச்சுப் போட்டு என்ர பெடிக்கும் போன் பண்ணிச் சொன்னன் பெற்றோல் கிடக்கடா வந்து அடியடா எண்டு. அவன் தனக்கு உப்பிடி மணித்தியாலக்கணக்கா நிக்கேலாது எண்டு மாட்டன் எண்டு போட்டான்.

வரிசை எண்டது எங்களுக்கு ஒண்டும் புதுசு கிடையாது. சிறிமா காலத்தில விடிய நாலு மணிக்கே எழும்பிப்போய் சங்கக் கடையில கூப்பனை அடுக்கிக் காவல் இருந்து பாண் வாங்கி இருக்கிறம். அத மாதிரி வரிசையில நிண்டு காட்டுக்கு சிந்தன்டிக் துணி அதாவது சீலை கால்சட்டை சேட்டுத்துணி எல்லாம் வாங்கி இருக்கிறம். அன்னதான மடங்களிலையும் வரிசையில நிண்டு வாங்கித் திண்டிருக்கிறம். அன்னதான மடத்தில என்னதான் வரிசையில நிண்டாலும் அன்னதான மடச்சபை உறுப்பினர் ஆரையுந்தெரிஞ்சா வரிசையில நிக்காமப் பின்னால போயும் வாங்கித்தின்னலாம். ஆனால் கோயில்லை ஐயர் வீபூதி சந்தனம் தீர்த்தம் குடுக்க வரிசையில நிக்காம தள்ளுப்பட்டு இடிபட்டு முட்டுப்பட்டு நிண்டு வாங்கி இருக்கிறம். வேறை ஒண்டும் இல்லை இப்பிடி வாங்கினால் தான் டக்கெண்டு முத்தி பெறலாம் எண்டு ஒரு நம்பிக்கை.

பேந்து சண்டை நடக்கேக்கை வவுனியாவுக்கு வாறுதுக்கு பாஸ் எடுக்க வரிசையில நிண்டு இருக்கிறம். பேந்து ஓமந்தை தாண்டிக்குளம் வந்து வவுனியாவுக்கு உள்ளை வர பாஸ் எடுக்க எண்டு வரிசையில நிண்டு இருக்கிறம். வவுனியா வந்த பிறகு வவுனியாவைத்தாண்டி மற்ற இடங்களுக்கு போறதுக்கு பாஸ் எடுக்க வரிசையில நிண்டு இருக்கிறம். அதுமாதிரி வவுனியாவுக்கு இஞ்சால இருந்து வவுனியாவுக்குள்ளை போகவும் பேந்து வவுனியாவில இருந்து அங்கால வடக்கால உள்ளுக்குப் போக பாஸ் எடுக்க எண்டும் வரிசையில நிண்டு இருக்கிறம் எண்டு ஆச்சி பழைய வரிசைக் கதையளைச் சொல்லுவா .

உப்பிடிப் பாஸ் எடுக்க நிக்கேக்கை ரெண்டு பக்கத்து புலனாய்வாளர்களும் பாக்கிற பார்வையையும் கேக்கிற கேள்வியையும் சமாளிக்கிறது எண்டது ஒரு பெரிய கலை. சில வேளை உந்தப் பாஸ் எடுக்க நாள்க்கணக்கிலயும் மினக்கெட்டிருக்கிறம். பிணைவைச் செல்லாம் எடுத்திருக்கிறம். உதை மாதிரி தாண்டிக்குளம் , ஓமந்தை , ஈரப்பெரியகுளம், பறயனாலங்குளம், முகமாலை, ஆலங்கேணி, கிளாலி எண்டு தடைமுகாம்களில எல்லைகளைக் கடக்க வரிசையில நிண்டு இருக்கிறம்.

உப்பிடி நிக்கேக்கை அங்கயே திண்டு குடிச்சு பெஞ்சு பேண்டு படுத்து எழும்பி இருக்கிறம். நிண்ட இடத்தில செல்லடி துவக்குச்சூடுகளுக்கெல்லாம் கல்லுப்பட்ட தேன்கூட்டுத் தேனியள் மாதிரிச்சிதறி ஓடி இருக்கிறம். செத்தும் காயம்பட்டும் பேந்தும் வரிசையில நிண்டு நிண்டு காரியங்களைச் செய்திருக்கிறம். பேந்து தடுப்பு முகாங்களில பெய்யப்பேல தின்ன எண்டெல்லாம் வரிசையில நிண்டு இருக்கிறம். அடி உதை எல்லாம் வாங்கி இருக்கிறம்.

அதுமாதிரி நிவாரணவரிசையில குடும்ப அட்டையையும் காவிக் கொண்டு நிண்டிருக்கிறம். விதானையைத்தெரியும் எண்டால் சங்கக்கடை மனேச்சரைத் தெரியும் எண்டால் இல்லாட்டில் அவையின்ரை எடுபிடியளைத் தெரியும் எண்டால் குடும்ப அட்டை இல்லாமலே சாமான் வாங்கி இருக்கிறம். சிலவேளை சாமான்களை கூடக்குறையவும் வாங்கி இருக்கிறம்.

எலக்சன் நேரமும் வேலை மினக்கெட்டு வரிசையில நிண்டு மொக்கன் மோடனுக்கெல்லாம் வோட்டுப் போட்ட மோட்டு வேலை எல்லாம் செய்திருக்கிறம். அத மாதிரி பேந்து உந்தக் கோல்களில கலியாணம் காட்சி எண்டு செய்யத் துடங்கின பிறகு சோத்து வரிசையில பிச்சைக்காரர் மாதிரி தட்டேந்தி வரிசையில நிக்கப்பழகி இருக்கிறம். அதிலையுஞ் சிலர் குறுக்க மறுக்க போறதை வாறதையும் பாத்திருக்கிறம்.

உதில பகிடி என்னண்டால் ஆற்றையும் சபை சந்திக்கு நேரத்துக்கு போகாமல் கேட்டால் பிசி நேரம் இல்லை எண்டிறவையும், தாலிகட்டுற நேரம் பாத்து சாப்பாட்டு நேரம் பாத்து கலியாண வீட்டை வாறவையும், செத்த வீட்டுக்கு போறதுக்கு ஒண்டுக்கு பத்துத் தரம் போன் பண்ணி எத்தினை மணிக்கு சவம் எடுக்கிறது எண்டு கேட்டு சவந்தூக்க ஆயத்தப்படுத்தேக்க வாறவையும் எண்ட பிசியான ஆக்கள் எல்லாம் இப்ப இந்த வரிசையில தங்கட பிசி எல்லாத்தையும் விட்டுப்போட்டுப் பொறுமையா நிக்கிறதைப் பாக்க மனசில ஒரு சந்தோஷம் தன்ரைபாட்டில வருகுது .

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.
அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.
உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.
இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.
தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்
உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**பெரிதாக மலைகள் இல்லாது போனாலும் பெருமளவில் பாறைத் தொடர்களை கொண்டுள்ளது வவுனியா மாவட்டம். முல்லைத்தீவின் தெற்கிலும், குருந்தூர்மலை மண்கிண்டிமலை, கும்பகர்னன்மலை, ஒதியமலை என்பனவும் இது போன்ற கற்பாறைகளாகும்**

# நிலத்தின் கதை

## பார்வை 13



தமிழ்க்கவி

பணமும் பதவியும் பெயரும் புகழும் இன்றைய மனிதர்களுக்கு இன்றியமையாததாகும். இவை பலவாக இருப்பினும் ஒன்றுடன் ஒன்று சார்ந்தே இருக்கின்றன. தற்கால இலங்கை அரசாங்கம், கடந்த கால ஊழல்களைப் பட்டியல்போட்டு அத்துடன் சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் நீதியின் முன் நிறுத்த முயன்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழர்களது நிலை மிக கேவலமானதாக மாறிவிட்டது.

இதற்கு அடி அத்திவாரம் போட்டவர்கள் இரண்டு தலைமுறைக்கு முந்திய அரசியல்வாதிகள்தான். அப்படி ஒரு அரசியல் வாதியின் அடிப்படைத்தந்திரத்தை ஒரு பெரும் வளமாக மாற்றினார். ஆம் அவருக்கே அவருக்கு மட்டுமே சொந்தமாக ஒரு குளத்தை கட்டுவித்தார். அந்தகுளத்தின் கீழ் பல நூறு ஏக்கர் வயல் நிலத்தையும் தனக்கே உரித்தாக்கினார். அதேசமயம் அந்த குளத்தின் மேற்கரையில் பத்து ஏக்கர் நிலம் பழமரச் செய்கைக்கும் தோட்டச்செய்கைக்கும் எடுத்துக் கொண்டார்.

அவ்வளவு நிலத்திலும் வேலை செய்ய கூலியாட்கள் வேண்டுமே அதற்கும் அவர் திட்டமிட்டு, மலையகத்திலிருந்து இனக்கலவரத்தை அடுத்து ஓடி வந்த மக்களை தனது நிலத்தை அடுத்து குடியிருக்க வசதி செய்து கொடுத்தார். அதேபோல தனது கராமத்தின் அயற்கிராமத்திற்கும் எண்பது மலையக குடும்பங்களை குடியமர்த்தி அவர்களது தேவைக்காக ஒரு குழாய்க்கிணறும் அடித்து கொடுத்தார். இதைவிட இருபத்தைந்து குடும்பங்கள் வவுனியாப்பகுதியிலிருந்தும் அங்கே குடியேற்றப்பட்டிருந்தன. இவர்கள் குடியிருக்க மட்டுமே நிலம் வழங்கப்பட்டிருந்தது. மற்றப்படி தொழில் செய்வதற்கோ அல்லது வேறு எந்த தொழிலுக்குமோ நிலம் இல்லை குளத்தில் மேற்கரையில் ஒரு குடும்பத்திற்கு காலேக்கர் நிலம் கொடுக்கப்பட்டது. ஒரு சிறு கொட்டில், மால், அடுக்களை, அவ்வளவுதான் மலசலகூடம் சூழலில் உள்ள பற்றைக்காடுகள்தான் பெருங்காடுகள் அவரது வயலைச்சுற்றி இருந்தது. அதன் முகப்பாடாக இந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கு வருடம் முழுதும் இந்த அரசியல்வாதியின் வயலிலும் தோட்டத்திலும் வேலை கிடைத்தது. காவல் உட்பட முழு வேலையும் இவர்களுடையது. தொலைவாகவும் ஆனால் கொஞ்சம் முன்னதாகவும் குடியேற்றப்பட்டு அவருடைய பெயரின் ஒரு பகுதியை அந்த கிராமத்தின் பெயராகவும் சூட்டிய அந்த கிராம வாசிகள், இந்த கூலி வேலை பிடிக்காமல் கலவரம் அடங்கியபின் மெள்ளமெள்ள தமது எஸ்டேட்டுகளுக்கு திரும்பத்தொடங்கினர். நாட்டு நிலையை பயன்படுத்தி சிலர்



இந்தியாவுக்கு அகதியாகப் போனார்கள். இப்போது அந்தக்கிராமத்திலிருந்து போராடப் போன ஒரு போராளி வீரச்சாவை தழுவிக் கொண்டான். அரச பதிவில் இல்லாத அந்த கிராமத்துக்கு இயக்கம் அந்த மாவீரனின் பெயரை சூட்டியது.. சிவநகர் கிருக்ஷ்ணாநகர் ஆகியது பின்னர் சில மாதங்களின்பின் அந்தக்கிராமத்தில் யாரும் இல்லாமல் குடிபெயர்ந்து போயினர். நாட்டில் மிகப்பெரியதான 1983ம் ஆண்டின் பிரச்சனை தலைவர்களையெல்லம் உலுக்கியபோது. அந்த குளத்தையும் காணிகளையும் தனது வீட்டையும் கூட கைவிட்டுவிட்டு தலைவர்களோடு அவரும் இந்தியாவிற்கு ஓடிவிட்டார். இப்பேஉது காட்டுக்கரைகளில் வாழ்ந்த மக்கள் மேலும் சிறிதளவு காணிகள் காடுவெட்டி எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அந்த முக்கியஸ்தருடைய சொத்துகள் மட்டும் இயக்கத்தால் கைப்பற்றப்பட்டு பெரிய



பண்ணையாக நடத்தப்பட்டது. அதே மக்கள் மீண்டும் கூலிகளாக அதே மண்ணில் வாழவேண்டி ஏற்பட்டது.

பூவரசன்குளத்திலிந்து மன்னார் நோக்கிச்செல்லும்வீதியில்முதலாவது மைல் கல்லில் வடக்கு நோக்கித் திரும்பும் வீதி பனங்காமம்வரை செல்கிறது. பூவரசன்குளம் புலவனாவூர், சிவபுரம், மடுக்குளம். (இதுதான் மேற்குறித்த குளம்)வேலன்குளம் கோவற்புளியங்குளம், அரனை இலுப்பைக்குளம், சின்ன வலயன்கட்டு, விளாத்திக்குளம், பாலைப்பாணி மூன்று முறிப்பு, இலுப்பைக்குளம் சிறாட்டிக்குளசந்தி, பனங்காமம், நட்டாங்கண்டல், ராமனூர்



ஒட்டங்குளம், துணுக்காய். இந்த வீதி பெரு வீதி மன்னர்காலத்து பாதை. மடுக்குளம் குறிப்பிட்ட இடத்தில் மேற்கே திரும்பி ஒரு மைல் போக, குளக்கட்டு வரும் அதன்மீது வாகனங்களும் ஓடலாம். அந்தவழிதான் கிராமத்து மக்கள் மடுவுக்கு செல்லும் சுருக்கமான கால்நடைப்பாதை, குளக்கட்டு முடிவில் காட்டுவழி சின்னதம்பனை கடந்தால் மடுவிற்குப் போகும் பிரதான வழி தென்படும். மடுக்குளம் மகவும்பிரதானமான பாதையாக திகழ்ந்த காலம் போர் வீசுரம் கொண்டகாலமாகும். இன்று விலாசமற்றுப் போன முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரின் சொந்தக்குளம்.

இன்னும் விடப்படாத அந்தக்குளம் பூவரசங்களம் பகுதியில் இருக்கிறது. பூவரசன் குளம் பகுதியில் அமைந்ததும் இதன் அருகே உள்ளதுமான பாரிய குளம் வேலன்குளம். வன்னியில் பல இடங்களில் வேலன்குளம் என்ற பெயரில் குளங்கள் உண்டு. நெடுங்கேணி பிரதேசத்திலும் நானாட்டான் பிரதேசத்திலும் எனக்குத் தெரிந்த வேலன்குளங்கள் உண்டு. இந்த வேலன்குளம்பின்புறமாக பிரம்மாண்டமான பெரும் மருதமரங்களைக் கொண்டது. இந்த குளக்கட்டின் மரங்களையும் அதன் அழகையும் விபரிக்க முடியாது. உள்ளே கண்ணுக்கெட்டிய தூரத்தில் அலைகரையில் காட்டுயானைகள் குளித்துக் கொண்டிருக்க, அதேசமயம்எதிர்க்கரையில்நமது கிராமத்துப் பெண்களுடன் நீராடியிருக்கிறேன். இந்தக்குளத்தின்கீழ் நூறு ஏக்'கர் வயல்நிலம் உள்ளது இது அண்ணளவான கணக்குத்தான் இந்தக்கிராமத்தில் படித்தவர்களைக் கொண்ட ஒரேயொரு குடும்பம் உள்ளது. ஆனாலும் அவர் கிராமம் முழுவதையும் கட்டிக்காத்தார். சினிமாவில் வரும் பண்ணையாரைப்போல. முன்னரே சொல்லாத ஒரு விடயம் இந்த கிராமம் பெரும் மாட்டுப்பட்டிகளைக் கொண்டது. எருமை மாடுகளும் பசுமாடுகளும் அதன் சொந்தக்காரர்களுக்கே எண்ணிக்கை தெரியாத அளவில் இருந்தன. இந்த ஊரில் பால் விற்பதில்லை. பெருமளவு மாடுகள் கறவையாக இருப்பதால் மாடில்லாத வீட்டுப் பெண்கள் காலையில் இந்தப்பட்டிகளுக்கு பால்கறக்கப்போவார்கள். கறக்கும் பாலில் பாதி கூலியாக கிடைக்கும். எனவே மாடில்லாத வீட்டிலும் பெரிய அண்டாவில் பால் காயும். காயும் பாலில் ஆடை எடுத்து சேர்த்து நெய் உருக்குவார்கள். பாலுடன் தேனும் இங்கு அதிகமாக சேகரிக்கப் படுகிறது. வன்னியின் நகரச்சாயல் தெரியாத பல கிராமங்கள் இது போல இன்றும் உள்ளன. குளங்களும் காடுகளும் வளம் சேர்க்கும் காரணிகளாக விளங்குகின்றன. இன்றைய நகர மக்களைப்போல இயற்கை வளங்களை அழிக்கும் மனப்போக்கு இவர்களிடமும் தொற்றிக் கொண்டால்

# “நிறுத்தி வைத்தல் வரி”




நிறுத்தி வைத்தல் வரி (WHT) என்பது இலங்கையில் உள்ள வரி முறையின்ஒரு முக்கிய அங்கமாகும், இது பெரும்பாலும் அனைத்து அளவிலான வணிகங்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு தவறாக நிர்வகிக்கப்படுகின்றது. அடிப்படையில், பணம் செலுத் துபவருக்கு (வட்டி, ஈவுத்தொகை, வாடகை அல்லது கட்டணம் போன்றவை) செலுத்த வேண்டிய கட்டணத்தின் ஒரு பகுதியை செலுத்துபவர் கழித்து, அதை செலுத்துபவரின் சார்பாக வரி அதிகாரிகளுக்கு அனுப்பும் ஒரு பொறிமுறையாகும். இந்தக் கட்டுரை வரிகளை நிறுத்தி வைப்பதில் உள்ள சிக்கல்கள், வணிகங்கள் எதிர்கொள்ளும் பொதுவான ஆபத்துகள் மற்றும் இந்தக் கடமைகளை திறமையாக நிர்வகிப்பதற்கான உத்திகள் ஆகியவற்றை ஆராய்கின்றது.

இலங்கையில் “நிறுத்தி வைத்தல் வரி (WHT)” அறிமுகப்படுத்தியதற்கான அடிப்படை காரணங்கள்:

இலங்கையில், வட்டி, ஈவுத்தொகை, சேவைக் கட்டணம், வாடகை, ராயல்டி மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் உட்பட பல்வேறு கொடுப்பனவுகளுக்கு நிறுத்தி வைத்தல் வரி (WHT) பொருந்தும். மேற்கூறிய கொடுப்பனவுகளை செலுத்தும் நேரத்தில் வரி கழிக்கப்பட்டு அந்தத்தொகையை கழித்த நபர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு (IRD) வரி செலுத்தும் பொறுப்பினை கொண்டுள்ளார். தனிநபர், நிறுவனம், வசிப்பவர் அல்லது குடியுரிமை பெறாதவர் என, பணம் செலுத்தும் தன்மை மற்றும் பெறுநரின் நிலையைப் பொறுத்து நிறுத்தி வைத்தல் வரிகளின் (WHT) விகிதங்களும் பொருந்தக்கூடிய தன்மையும் மாறுபடும்.

நிறுத்தி வைத்தல் வரி யின் முதன்மை நோக்கம், சரியான நேரத்தில் வரி வசூலிப்பதை உறுதி செய்வதும், வரி ஏய்ப்பு அபாயத்தைக் குறைப்பதும் ஆகும். வணிகங்களைப் பொறுத்தவரை, இந்த அமைப்பு வரி வசூலிக்கும் பொறுப்பை அரசாங்கத்திடமிருந்து செலுத்துபவருக்கு மாற்றுகின்றது, இது நிதி நிர்வாகத்தின் முக்கிய அம்சமாக அமைகின்றது.

நிறுத்தி வைத்தல் வரியின் சிக்கல்கள்

1. மாறுபட்ட கட்டணங்கள் மற்றும் விலக்குகள்: வருமான வகை மற்றும் பெறுநரின் வரி நிலை ஆகியவற்றின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் வரியின் விகிதங்கள் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, ஈவுத்தொகைக்கான விகிதம் வட்டி அல்லது தொழில்முறை கட்டணங்களில் இருந்து வேறுபடலாம். மேலும், சில நிறுவனங்கள் அல்லது கொடுப்பனவுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படலாம், அல்லது சிக்கலான மற்றொரு முறைமையினை சேர்க்கலாம்.

2. இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தங்கள் (DTTகள்): இலங்கை பல நாடுகளுடன் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. வணிகங்கள் சரியான விகிதங்களைப் பயன்படுத்துவதற்கும் தேவையற்ற வரிப் பொறுப்புகளைத் தவிர்ப்பதற்கும் இந்த ஒப்பந்தங்களின் விதிகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

3. கட்டணங்களின் தவறான வகைப்பாடு: ஒருபொதுவான குறைபாடானது, பணம் செலுத்துதல்களின் தவறான வகைப்பாடு ஆகும், இது தவறான வரி விகிதம் பயன்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கின்றது. உதாரணமாக, ராயல்டி கட்டணத்தை சேவைக் கட்டணமாக தவறாக வகைப்படுத்துவது குறைவான கட்டணம் அல்லது வரிகளை அதிகமாகச் செலுத்துவதற்கு வழிவகுக்கும். இதன் காரணமாக அபராதம் மற்றும் வட்டி விதிக்கப்படலாம்

4. நேரம்மற்றும்தாக்கல்தேவைகள்: குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஐசுனு க்கு நிறுத்தி வைத்தல் வரி கள் செலுத்தப்பட வேண்டும். இணங்கத் தவறினால் கடுமையான அபராதங்கள் மற்றும் வட்டி கட்டணங்கள் அறவிடப்படும். வரி தணிக்கையின் போது முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு துல்லியமான வருமானம் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிப்பது மிகவும் முக்கியமானது.


AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

5. கொடுப்பனவுகள்மற்றும்கடன்களை சமன்படுத்துதல்: செலுத்தியவர் நிறுத்தி வைக்கப்பட்ட வரிகளுக்கான கிரெடிட்டைப் பெறுவதை உறுதி செய்வது மற்றொரு சவாலாகும். கழிக்கப்பட்டது மற்றும் புகாரளிக்கப்பட்டவற்றுக்கு இடையே உள்ள முரண்பாடுகள் சர்ச்சைகள், தாமதமான பணத்தைத் திரும்பப் பெறுதல் அல்லது கூடுதல் வரி மதிப்பீடுகளுக்கு வழிவகுக்கும்.

## நிறுத்தி வைத்தல் வரியினை (WHT) நிர்வகிப்பதற்கான பொதுவான ஆபத்துகள்

1. வரி விகிதங்களின் தவறான பயன்பாடு: வரிச்சட்டங்கள் அல்லது ஒப்பந்த விதிகளின் தவறான புரிதலின் காரணமாக தவறான விகிதத்தைப் பயன்படுத்துவது அடிக்கடி ஏற்படும் பிரச்சினையாகும். இந்தத் தவறு குறைந்த-தடுப்பு அல்லது அதிக-தடுப்புக்கு வழிவகுக்கும், இவை இரண்டும் நிதி விளைவுகளை ஏற்படுத்தும்.

2. முறையான ஆவணங்களைப் பராமரிக்கத் தவறி இருப்பின்: வரிச் சான்றிதழ்களை நிறுத்தி வைப்பது உட்பட முறையான ஆவணங்கள், பணம் செலுத்துபவர் மற்றும் பணம் செலுத்துபவர் இருவருக்கும் முக்கியமானதாகும். போதிய பதிவுகளை வைத்திருப்பது வரி தணிக்கையின் போது சவால்களுக்கு வழிவகுக்கும், இது விலக்குகளை உறுதிப்படுத்துவது அல்லது கிரெடிட்களை கோருவது கடினம்.

3. அறிக்கையிடல் காலக்கெடுவுடன் இணங்காது போனால்: நிறுத்தி வைத்தல் வரியினை அல்லது வருமானத்தை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவை தவறவிட்டால் அபராதம் விதிக்கப்படலாம். போதுமான உள்செயல்முறைகள் அல்லது விழிப்புணர்வு இல்லாமை காரணமாக பல வணிகங்கள் இந்த காலக்கெடுவுடன் போராடுகின்றன.

4. விதிவிலக்குகள் மற்றும் நிவாரணங்கள் பற்றிய புரிதல் இல்லாமை: வரிச் சட்டம் அல்லது பொருந்தக்கூடிய ஒப்பந்தங்களின் கீழ் கிடைக்கும் விலக்குகள் அல்லது நிவாரணங்கள் பல வணிகங்களுக்குத் தெரியாது. இந்த போதிய விளக்கமின்மை வரிகளை அதிகமாக செலுத்துவதற்கு அல்லது வரி சேமிப்புக்கான வாய்ப்புகளை இழக்க வழிவகுக்கும்.

### நிறுத்தி வைத்தல் வரி யின் திறமையான மேலாண்மைக்கான உத்திகள்

1. வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பற்றி புதுப்பித்த நிலையில் இருத்தல்: வரிச் சட்டங்கள் அடிக்கடி மாற்றங்களுக்கு உட்பட்டவை, மேலும் தகவலறிந்திருப்பது இணக்கத்திற்கு முக்கியமாகும். வரி ஆலோசகர்களுடன் தவறாமல் கலந்தாலோசிப்பதுடன் பட்டறைகளில் பங்கு பற்றுவதும் சிறந்த முறையாக அமையும்.

2. வலுவான உள் கட்டுப்பாடுகளை செயல்படுத்தல்: வரிகளை அடையாளம் காணவும், கணக்கிடவும் மற்றும் திருப்பிச் செலுத்தவும் தெளிவான நடைமுறைகளை நிறுவவும். பிழைகளைக் குறைக்க சரிபார்ப்புப் பட்டியல்கள் மற்றும் தானியங்கு அமைப்புகளைப் பயன்படுத்தவும் மற்றும் கட்டணங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு புகாரளிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும்.

3. துல்லியமான ஆவணங்களை பராமரிக்கவும்: இன்வாய்ஸ்கள், ஒப்பந்தங்கள் மற்றும் வரிச் சான்றிதழ்கள் உட்பட, நிறுத்தி வைத்தல் வரிக்கு உட்பட்ட அனைத்து பரிவர்த்தனைகளின் விரிவான பதிவுகளை வைத்திருங்கள். வரி தணிக்கை அல்லது தகராறு ஏற்பட்டால் இந்த ஆவணம் இன்றியமையாததாக இருக்கும்.

4. தொழில்முறை ஆலோசனையை நாடுங்கள்: வரிகளை தடுத்து வைப்பதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, வரி நிபுணர்களுடன் ஈடுபடுவது வணிகங்களுக்கு விதிகளை வழிநடத்தவும், சரியான கட்டணங்களைப் பயன்படுத்தவும் மற்றும் கிடைக்கும் விலக்குகளை அதிகரிக்கவும் உதவும். எல்லை தாண்டிய பரிவர்த்தனைகள் மற்றும் இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தங்களைக் கையாளும் போது தொழில்முறை ஆலோசனை மிகவும் முக்கியமானது.

5. சரியான நேரத்தில் தாக்கல் செய்தல் மற்றும் பணம் செலுத்துதல்: குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வரிகள் செலுத்தப்படுவதையும், ரிட்டர்ன்கள் தாக்கல் செய்யப்படுவதையும் உறுதிசெய்யவும். தாமதங்களைத் தடுக்க நிதிக் குழுவிற்குள் நினைவூட்டல்களை அமைக்கவும் மற்றும் பொறுப்புகளை ஒதுக்கவும்.

கீழ்வரும் கொடுப்பனவுகளுக்கு நிறுத்தி வைத்தல் வரி தரப்பட்டுள்ள வீதங்களில் கழிக்கப்படும்.

| கொடுப்பனவு | ஏற்புடைய நி.வை.வ. வீதம் (%) |
|---|---|
| 85(2) ஆம் பிரிவு மற்றும் 2018, ஏப்பிரல் 01 ஆம் திகதிய 2064/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றின் பிரகாரம் நிலம், கடல் வான் போக்குவரத்து அல்லது தொலைதொடர்பாடல் சேவைகள் தொடர்பில் வதிவற்ற ஆளொருவருக்கான கொடுப்பனவு | 2% |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் நடாத்தப்படும் ஏலவிற்பனையில் விற்கப்பட்ட ஏதேனும் இரத்தினக்கல்லிற்கு விற்பனையாளருக்கு செலுத்தப்படற்பாலதான விற்பனை விலை | 2.5% |
| செலுத்துநரின் ஊழியர் அல்லாத வதிவுள்ள தனியாளிற்கான சேவைக் கட்டணக் கொடுப்பனவு (மொத்த கொடுப்பனவு கலண்டர் மாதம் ஒன்றுக்கு ரூபா 100,000 இனை விஞ்சின்) - (அ) கற்பித்தல், விரிவுரையாற்றல், பரீட்சித்தல், பரீட்சை ஒன்றை கண்காணித்தல் அல்லது மேற்பார்வை செய்தலுக்காக; (ஆ) வதிவுள்ள காப்புறுதி, விற்பனைகள் அல்லது பிரசார முகவருக்கான தரகு அல்லது தரகுக் கூலி ஒன்றுக்காக; அல்லது (இ) ஒழுங்கு விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வைத்தியர், இயந்திரவியலாளர், கணக்காளர், சட்டத்தரணி, மென்பொருள் உற்பத்தியாளர், ஆய்வாளர், கல்வியாளர் போன்ற தனிப்பட்ட சேவை வழங்கும் திறனைக் கொண்ட தனியாளினால் அல்லது எவரேனும் தனிப்பட்ட சேவை வழங்குநர் வழங்கிய சேவைகளுக்கு | முழுக் கொடுப்பனவில் 5% |
| செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவு | 5% |
| வதிவுள்ள ஆளொருவருக்கான வாடகை (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 195 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறான) கொடுப்பனவுகள் (கூட்டுத்தொகையானது கலண்டர் மாதம் ஒன்றுக்கு ரூபா 100,000 இனை விஞ்சின்) | முழுக் கொடுப்பனவில் 10% |
| லொத்தர், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிக்காக செலுத்தப்பட்ட தொகைகள் | 14% |
| விதிப்பனவு, இயற்கை வள கொடுப்பனவு (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 195 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு) அல்லது கட்டுப்பணம் | 14% |
| அரசுரிமைப் பணம் (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 195 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்டவாறு) | 14% |
| வதிவற்ற ஆளொருக்கான வாடகை கொடுப்பனவுகள் | 14% |
| வதிவற்ற ஆளொருவருக்கான சேவைக் கட்டணம் அல்லது காப்புறுதி கட்டுபணம் ஒன்றுக்கான கொடுப்பனவு | 14% |
| பங்கிலாபம் | 15% |

ஜனவரி 1, 2023 அன்று அல்லது அதற்குப் பின்பு ஒரு குடியுரிமை நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட பங்குஇலாபத்தொகைக்கு கழிக்கப்படும் நிறுத்தி வைத்தல் வரி இறுதி நிறுத்தி வைத்தல் வரி ஆகும்.

இலங்கையில் எந்தவொரு வணிகமும் சுமூகமான முறையில் இயங்குவதற்கு நிறுத்தி வைத்தல் வரியினை (WHT) புரிந்துகொள்வதும் நிர்வகிப்பதும் இன்றியமையாததாகும். தகவலறிந்து இருப்பதன் மூலமும், முறையான ஆவணங்களைப் பராமரிப்பதன் மூலமும், தொழில்முறை வழிகாட்டுதலைப் பெறுவதன் மூலமும், வணிகங்கள் பொதுவான ஆபத்துக்களைத் தவிர்க்கலாம், மற்றும் வரிக் கடமைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யலாம். வரிகளை திறம்பட நிர்வகிப்பது அபராதம் மற்றும் வட்டியை குறைக்க உதவுவது மட்டுமல்லாமல் சிறந்த நிதி திட்டமிடல் மற்றும் ஒட்டுமொத்த வணிக நிலைத்தன்மைக்கும் பங்களிக்கின்றது.

வரியை தடுத்து வைத்தலில் உள்ள சிக்கல்களை வழிநடத்துவது கடினமானதாக தோன்றலாம், ஆனால் சரியான உத்திகள் மற்றும் ஆதரவுடன், வணிகங்கள் இந்த சவாலை வளர்ச்சி மற்றும் இணக்கத்திற்கான வாய்ப்பாக மாற்ற முடியும்.

# (Digital economy) எண்ணிம பொருளாதாரம் எந்த அளவிற்கு தாக்கம் செலுத்த போகிறது?

**இலங்கையில் தாக்கம் ஆசியாவில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் தாக்கம் சமூகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு அம்சங்களை மாற்றுகிறது. டிஜிட்டல் உள்கட்டமைப்பு, இணைய ஊடுருவல் மற்றும் ஸ்மார்ட்போன் ஆகியவற்றில் இப்பகுதி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது, இது டிஜிட்டல் தளங்கள், இ-காமர்ஸ் மற்றும் டிஜிட்டல் சேவைகளின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இது தொழில்முனைவோர், வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை தூண்டியுள்ளது**

வானதி

உலகளாவிய டிஜிட்டல் பொருளாதாரம் வரும் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் மாற்றத்திற்கு தயாராக உள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் அதிகரித்து வரும் இணைப்புகளுடன், டிஜிட்டல் பொருளாதாரம் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் முக்கிய இயக்கியாக மாறியுள்ளது. முன்னோக்கிப் பார்க்கும்போது, பல முக்கிய போக்குகள் மற்றும் கண்ணோட்டங்கள் டிஜிட்டல் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றன. முதலாவதாக, செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது தொடர்ந்து துரிதப்படுத்தப்படும். இந்த தொழில்நுட்பங்கள் நிதி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் உற்பத்தி, ஓட்டுநர் திறன் மற்றும் புதுமை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புரட்சியை ஏற்படுத்தும்.

இரண்டாவதாக, இ-காமர்ஸ் மற்றும் டிஜிட்டல் தளங்களை விரிவுபடுத்துவது புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் பாரம்பரிய தொழில்களை மறுவடிவமைக்கும். ஆன்லைன் சில்லறை விற்பனை தொடர்ந்து வளரும், மாறிவரும் நுகர்வோர் விருப்பங்கள் மற்றும் அதிகரித்த டிஜிட்டல் கல்வியறிவு ஆகியவற்றால் தூண்டப்படுகிறது. கூடுதலாக, கிக் பொருளாதாரம் மற்றும் தொலைதூர




வேலை ஆகியவை முக்கியத்துவம் பெறும், தனிநபர்கள் நெகிழ்வாக வேலை செய்யவும் மற்றும் உலகளாவிய வேலை சந்தைகளை அணுகவும் உதவுகிறது. மூன்றாவதாக, டிஜிட்டல் பொருளாதாரத்தில் தரவு முக்கிய பங்கு வகிக்கும். சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் தரவு பணமாக்குதல் ஆகியவை தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள், இலக்கு சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட முடிவெடுக்கும். இருப்பினும், தரவு தனியுரிமை மற்றும் இணைய பாதுகாப்பு கவலைகளுக்கு வலுவான விதிமுறைகள் மற்றும் பாதுகாப்புகள் தேவைப்படும்.


டிஜிட்டல் உள்ளடக்கம் ஒரு முக்கிய மையமாக இருக்கும். தொழில்நுட்பம், இணைப்பு மற்றும் டிஜிட்டல் திறன்களுக்கு சமமான அணுகலை உறுதிசெய்து, டிஜிட்டல் பிளவைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது உலக அளவில் பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களிக்கும். கடைசியாக, டிஜிட்டல் பொருளாதாரத்தை வடிவமைப்பதில் அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்புகள் மற்றும் கூட்டாண்மைகள் இன்றியமையாததாக இருக்கும். ஒத்துழைப்பு கொள்கை கட்டமைப்பை இயக்கும், புதுமை சுற்றுச்சூழல் அமைப்புகளை வளர்க்கும் மற்றும் டிஜிட்டல் வரிவிதிப்பு, அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் எல்லை தாண்டிய தரவு ஓட்டங்கள் போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும்.

இலங்கையில் தாக்கம் ஆசியாவில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் தாக்கம் சமூகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு அம்சங்களை மாற்றுகிறது. டிஜிட்டல் உள்கட்டமைப்பு, இணைய ஊடுருவல் மற்றும் ஸ்மார்ட்போன் ஆகியவற்றில் இப்பகுதி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது, இது டிஜிட்டல் தளங்கள், இ-காமர்ஸ் மற்றும் டிஜிட்டல் சேவைகளின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இது தொழில்முனைவோர், வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை தூண்டியுள்ளது. இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரம் சீராக வளர்ந்து வருவதுடன் நாட்டின் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசாங்கம் டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஆற்றலை அங்கீகரித்து அதன் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பின் விரிவாக்கம் கவனம் செலுத்தும் ஒரு முக்கிய பகுதியாகும். நாடு முழுவதும் இணைய அணுகல் மற்றும் பிராட்பேண்ட் இணைப்பை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, டிஜிட்டல் பொருளாதாரத்தில் அதிக மக்கள் பங்கேற்க உதவுகின்றன. இதன் விளைவாக இணைய ஊடுருவல் மற்றும் ஸ்மார்ட்போன் பயன்பாடு அதிகரித்தது. மறுபுறம், இலங்கையில் ஈ-காமர்ஸ் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளது. ஆன்லைன் ஷ ாப்பிங் தளங்கள் பிரபலமடைந்துள்ளன, மேலும் அதிகமான வணிகங்கள் டிஜிட்டல் இருப்பை நிறுவுகின்றன. இது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (SMEs) சந்தை அணுகலை விரிவுபடுத்தியுள்ளது மற்றும் எல்லை தாண்டிய வர்த்தகத்தை எளிதாக்கியுள்ளது. டிஜிட்டல் நிதிச் சேவைகளும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. மொபைல் கட்டணத் தீர்வுகள் மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவைகள், நிதி பரிவர்த்தனைகளை தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு மிகவும் வசதியாகவும் அணுகக்கூடியதாகவும் ஆக்கியுள்ளன. இது நிதி உள்ளடக்கத்தை இயக்கவும்,

முறையான நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தவும் உதவியது. மேலும், டிஜிட்டல் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோரை அரசு ஊக்குவித்து வருகிறது. டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தவும், பயிற்சி குறியீட்டு முறை, தரவு பகுப்பாய்வு மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் வழங்கவும் முன்முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. இது டிஜிட்டல் பொருளாதாரத்தில் பங்கேற்பதற்குத் தேவையான திறன்களுடன் பணியாளர்களை சித்தப்படுத்தியுள்ளது மற்றும் டிஜிட்டல் ஸ்டார்ட்அப்கள் மற்றும் புதுமைகளின் வளர்ச்சியை ஆதரித்துள்ளது.

சவால்களை எதிர்கொள்வது எவ்வாறாயினும், இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் திறனை முழுமையாகப் பயன்படுத்துவதில் சவால்கள் உள்ளன. ஒழுங்குமுறை கட்டமைப்புகளை நிவர்த்தி செய்தல், தரவு தனியுரிமை மற்றும் இணைய பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் டிஜிட்டல் பிளவைக் குறைத்தல், குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ளடங்கும். டிஜிட்டல் உள்கட்டமைப்பு, கல்வி மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து முதலீடு செய்வது இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் தாக்கத்தை மேம்படுத்துவதில் முக்கியமானதாக இருக்கும். டிஜிட்டல் பொருளாதாரத்தின் எதிர்காலம் மாறும் மற்றும் உருமாறும் என எதிர்பார்க்கப்படுகிறது, பல முக்கிய போக்குகள் அதன் பாதையை வடிவமைக்கின்றன. மிக முக்கியமாக, செயற்கை நுண்ணறிவு ஆட்டோமேஷன் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை செயல்படுத்தும், அதே நேரத்தில் பிளாக்செயின் விநியோகச் சங்கிலிகள், நிதி பரிவர்த்தனைகள் மற்றும் டிஜிட்டல் அடையாளங்களில் புரட்சியை ஏற்படுத்தும். யுசு அதிவேக அனுபவங்களை மேம்படுத்தும், மேலும் ஐழவு பில்லியன் கணக்கான சாதனங்களை இணைக்கும், பிணைய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கும்.




தரவு மதிப்புமிக்க சொத்தாகத் தொடரும், புதுமைகளை உந்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி. தரவு தனியுரிமை மற்றும் தரவு பயன்பாட்டிற்கு இடையே சரியான சமநிலையை உருவாக்குவது மிக முக்கியமானதாக இருக்கும், மேலும் புதுமைகளை வளர்க்கும் போது தனிநபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் விதிமுறைகள் உருவாகலாம். பாரம்பரிய தொழில்கள் தானியங்கி, இணைப்பு மற்றும் பகுப்பாய்வு மூலம் இயக்கப்படும் டிஜிட்டல் மாற்றத்திற்கு உட்படும். செயல்திறன், உற்பத்தித்திறன் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த வணிகங்கள் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும். டிஜிட்டல் பிளவைக் குறைக்கும் முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் முயற்சிகள் முக்கியத்துவம் பெறும். தொழில்நுட்பம், இணைப்பு மற்றும் டிஜிட்டல் திறன்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்ய அரசாங்கம் வேலை செய்ய வேண்டும். கிராமப்புறங்களுக்கு இணைய அணுகலை வழங்குதல், டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தில் குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட குழுக்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

டிஜிட்டல் பொருளாதாரம் விரிவடையும் போது, இணைய பாதுகாப்பு ஒரு முக்கியமான கவலையாக இருக்கும். முக்கியமான தரவுகளைப் பாதுகாப்பது, டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பாதுகாப்பது மற்றும் இணைய அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவது ஆகியவை மிக முக்கியமானதாக இருக்கும். டிஜிட்டல் பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சிக்கு இணைய பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவது மற்றும் டிஜிட்டல் அமைப்புகளில் நம்பிக்கையை வளர்ப்பது அவசியம். மேலும், டிஜிட்டல் பொருளாதாரத்தில் சவால்களை எதிர்கொள்ளவும் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் அரசாங்கத்திற்கும் பல்வேறு பங்குதாரர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு இன்றியமையாததாக இருக்கும். சுருக்கமாக, டிஜிட்டல் பொருளாதாரத்தின் எதிர்காலம் புதுமை, செயல்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளது. இந்த போக்குகளை ஏற்றுக்கொள்வது மற்றும் அதனுடன் தொடர்புடைய சவால்களை வழிநடத்துவது இலங்கை டிஜிட்டல் யுகத்தில் செழிக்க மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

# இலங்கையின் கடல் வளம்

**இந்த சூரிய வெப்பம் காரணமாக இந்த மீன்கள் உண்ணக்கூடிய பிளான்டன் உணவுகள் இங்கு தாராளமாக கிடைக்கின்றன இதன் காரணத்தால் இங்கு மீன்கள் பல்கி பெருகி தமது இனப்பெருக்கத்தை பெருக்கிக் கொண்டு இருக்கின்றன. யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் ஆறுகள் இல்லாத போதிலும். 70 அடி உயரமான கீரிமலை உயர் பீடத்திலிருந்து வழிந்து ஓடுகின்ற மழைநீரின் தாக்கம் இங்கு ஒரு ஆற்றுமுக கலக்கத்தை உருவாக்கி அங்கு மீன்களை பெருக்க உணவாகி உதவுகின்றது.**





லதா கந்தையா

வடபகுதியில் மீன்பிடிச் சிறப்பு பெற்ற ஓர் இடமாக மயிலிட்டி காணப்படுகின்றது. இந்த மயிலிட்டி என்ற மீன்பிடி இடம் ஒரு துறைமுகமாகவும் காணப்படுகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் இலங் கைச் சூழ உள்ள கடல் மீன் பிடி சிறப்புக்கு காரணமாக அமைகின்றது, வடபகுதியில் அமைந்திருக்கின்ற மயிலிட்டியை பொறுத்தவரை அது இலங்கையின் கண்டமாடை பகுதி அமைந்திருக்கும் இடத்தை கொண்டு இருப்பதனால் இது வரும் மீன்பிடிக்கு சாதகமான ஒரு சூழலாக காணப்படுகின்றது. மட்டுமன்றி இங்கு வீசப்படும் வடகீழ் பருவக்காற்று , தென்மேல் பருவக்காற்று போன்ற கருத்துக்களும் இந்த மீன்பிடிக்கு சாதகமாக அமைகின்றன.

ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்த வர்களைக் கொண்டு இந்த மீன்பிடி துறைமுகத்தைச் சார்ந்த மீன் பிடியாளர்கள் பயனாளிகளாக பயன் பெற்றிருக்கிறார்கள். மிகவும் பிரசித்தமான துறைமுகங்களில் ஒன்றாக விளங்கிய மயிலிட்டி துறைமுகம் காலப்போக்கில் ஏற்பட்ட உள்நாட்டு போர் சூழல் காரணமாக மீன்பிடித் தொழில் நிலையிலும் பாதிப்பை எதிர்நோக்கி இருந்தது இங்குள்ள மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்நாட்டு அகதிகளாகவும் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளுக்குச் சென்று அந்நிய நாட்டு அகதிகளாகவும் மாறினர்.

ஒரு காலத்தில் மிகவும். பிரபலமாக விளங்கிய மீன் பிடிக்கு மயிலிட்டி துறைமுகம் பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு கீழே இராணுவத்துக்கு மட்டுமே உரியதாக மாறி அவர்களே பயன்பெற்றார்கள். அவர்களே தென்பகுதி மீனவர்களை வைத்தும் பயன் பெற்றுக் கொண்டும் இருந்தார்கள். கடந்த ஆறு வருடத்தின் முன்னர் மயிலிட்டி வாழ்மக்களுக்கு ஒரு விமோசனம் கிடைத்தது. அவர்கள் மீண்டும் தங்கள் இடங்களிலே குடியேற்றப்பட்டார்கள். அவர்களுடைய காணிகள் விடுவிக்கப் பட்டன.

அவர்களுடைய துறைமுகம் விடுவிக் கப்பட்டது. துறைமுகத்தை நம்பி வாழ்ந்த மீனவ குடும்பங்கள் மீண்டும் அங்கே தொழில் செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் அங்கும் அவர்களுக்கு இடையூறு காத்திருந்தது. அவர்களுக்கான இடையூறாக இந்திய மீனவர்கள் மாறி இருக்கிறார்கள். அது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இது ஒரு இழுறியான நடவடிக்கையாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இரண்டு பக்க நாட்டு அரசியல் தலைவர்களும் இதன் மீது கரிசனையோடு ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன் வராத நிலையில் அது இன்றும் ஒரு முறுகல் நிலையில் தீராத பிரச்சனையாக நீடித்திருக்கின்றது. இதன் மூலமாக எல்லைமீறிய சம்பவங்களால் சூட்டு சம்பவங்கள் இடம் பெற்று இருக்கின்றது. பல உயிர்கள் பலியாகி இருக்கின்றன.

இது இன்று தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக மீனவர்கள் கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு மிகவும் பயப்படுகிறார்கள். அது மட்டுமின்றி அவர்களுடைய பல லட்சம் பெறுமதியான வலைகளை அறுப்பதும் அவர்களுடைய மீன்பிடிபடகுகளை உடைப்பதுமாக இந்திய மீனவர்களின் தொல்லை அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதற்கான தீர்வும் மீனவர்களுக்கான பிராயச்சித்தத்தையும் அரசு மேற்கொள்வதில்லை. வடபகுதி கடல் அடித்தளத்தில் பெருகி இருக்கும் மீன்களை வாரி அள்ளும் இயந்திரப் படகுகளையும் தடைசெய்யப்பட்ட லலைகளையும் தடை செய்யப்பட்ட தங்கூசிகளையும் பயன்படுத்தி இந்த இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். அதனை வன்மையாக கண்டிக்கும் விதமாக மீனவர்கள் போராட்டங்களை மேற்கண்ட போதிலும் அதற்கான பயன்கள் எதுவுமே இன்றுவரை கிட்டவில்லை.

இலங்கைக்கு இந்தியாவுக்கும் இடையிலான தூரம் 32 கிலோமீட்டர்களாக இருக்கின்றது ஆனால் இலங்கையின் கடல் அடித்தள மேடையின் பரப்பளவு வந்து கரையோரத்தில் இருந்து 15 கிலோமீட்டர் தொடக்கம். 30 கிலோமீட்டர்

வரையும் அகலமானதாக இந்த கடல் அடித்தளமேடைகள் காணப்படுகின்றன. இதனால் கடல் அடித்தளம் மேடைகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அதாவது இலங்கையின் வடபகுதி மயிலிட்டி துறைமுகத்திலிருந்து இந்தியாவின் தென்பகுதியில் இருப்பவரை மிக குறுகிய இடப்பரப்பாக இருப்பதனால் அவர்களும் மீன்பிடி சிறப்பை பெற்றுக் கொள்வதற்கு இந்த கடலடித்தள மேடையை பயன்படுத்துகின்றார்கள் இதன் காரணமாகவே இந்த இரு பகுதி மீனவர்களுக்கும் இடையிலே ஒரு இழுபறி நிலை தோன்றிக் கொண்டே இருக்கின்றது இதற்கான சரியான தீர்வு காணப்படாது விடில் இது ஒரு தீராத பிரச்சினையாகவே தொடரப்போகின்றது. இந்தக் கண்ட மேடைகளின் சிறப்பு என்னவெனில் இந்த கடலடித்தளமேடுகள் அகலமானதாக அமைந்திருப்பது ஆழமானதாக அமைந்திருப்பது பரந்துபட்டதாக அமைந்திருப்பதனால் இங்கு மீன்கள் செறிவாக வாழக்கூடிய சூரிய ஒளியையும் வெப்பத்தையும் பெறுகின்றன.

இந்த சூரிய வெப்பம் காரணமாக இந்த மீன்கள் உண்ணக்கூடிய பிளான்டன் உணவுகள் இங்கு தாராளமாக கிடைக்கின்றன இதன் காரணத்தால் இங்கு மீன்கள் பல்கி பெருகி தமது இனப்பெருக்கத்தை பெருக்கிக் கொண்டு இருக்கின்றன. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் ஆறுகள் இல்லாத போதிலும். 70 அடி உயரமான கீரிமலை உயர் பீடத்திலிருந்து வழிந்து ஓடுகின்ற மழைநீரின் தாக்கம் இங்கு ஒரு ஆற்றுமுக கலக்கத்தை உருவாக்கி அங்கு மீன்களை பெருக்க உணவாகி உதவுகின்றது.

அது மட்டுமன்றி இலங்கையில் இருக்கும் ஆறுகளும் அதன் வேகங்களும் அவை அள்ளிவரும் தாவர உணவுகளும் இந்த கடலடித்தளமேடையில் மீன் பெருக்கத்துக்கு ஒரு காரணமாக அமைகின்றது. அது மட்டுமன்றி இந்த சூர்ய ஒளி ஊடுருவி பரவக்கூடிய இந்த கடல் அடித்தளம் அதுமட்டுமன்றி இலங்கையைச்சூழ உள்ள குடாக்கள் முனைகள் கடல் நீர் ஏரிகள், கண்டல்தாவர படுக்கைகள், போன்றவையும் இந்த மீனின இனப்பெருக்கத்துக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றது. இவை கரையோரம் முழுவதுமாக பல்கிப் பெருகி தமது நடமாட்டத்தை மேற் கொள்வதால் அங்கு மீன்கள் இன்னும் கூடுதலாக பிடிப்பதற்கு ஏதுவான ஒரு நிலப்பரப்பாக இந்த கடல் நிலப்பரப்பு காணப்படுகின்றது.

மயிலிட்டி மீனவர்கள் இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணத்தின் தலையின் மேலே அமைந்திருக்கின்ற



கண்ட மேடையான பேதுரு கடல் அடித்தள மேடையிலேயே இவ்வாறு பல்கிப் பெருகும் மீன்களை பிடித்துக் கொள்கின்றார்கள். இந்த பேதுரு கடல் அடித்தடம் மேடையிலே சங்குகள் ஏராளமாக காணப்படுகின்றன. அத்தோடு கணவாய் நண்டு வகைகளும் ஆமை கடல்பன்றி கடல்அட்டை என்பனவும். இந்த கண்டமேடைப்பரப்புகளிலே நிரம்பி காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்தது போல தோணிகள் வள்ளங்கள் கட்டுமரங்களை பயன்படுத்தி மீன் பிடிக்கும் இயல்புகள் இப்போது இல்லாது விட்டாலும் இப்பொழுது நவீன இயந்திர படகுகளை பயன்படுத்தி மீன்பிடிக்கும் நிலைக்கு மீனவர்கள் வளர்ச்சியுற்ற போதிலும் இந்திய மீனவர்களின் தலையீடு இந்திய மீனவர்கள் வந்து இந்த கடல் அடித்தளம் மேடையில் காணப்படும் மீன்களை அபகரித்துச் செல்வதும்.

இலங்கை பொருளாதாரத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற நிலைப்பாட்டை இன்றுவரை அரசாங்கமும் கவனிக்காமல் இருப்பது ஏன் என்பதுதான் தெரியவில்லை. இலங்கையைச் சூழ உள்ள இந்த கடல் அடித்தள மேடை யீன்பிடி மற்றும் ஆழ்கடல் மீன் பிடிக்களை வைத்து இலங்கை ஒரு சிறப்புமிக்க மீனுற்பத்தி பொருளாதார கட்டமைப்பை அடைய முடியும் .அந்த அளவுக்கு பல்கி பெரிய மீன்வளம் இலங்கையைச்சூழ காணப்படுகிறது. இலங்கை மக்களுக்கு. அந்நிய நாடுகளில் இருந்து. தகரங்களில் அடைக்கப்பட்ட மீன்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அந்த அளவுக்கு மீன் வளத்தில் குறைந்து போன நாடு அல்ல இலங்கை. உண்மையிலேயே மீன் பிடி சிறப்புகளை சரியான முறையில் அரசாங்கம் பராமரிக்காததன் விளைவு இந்த ஒரு அசாதாரண சூழ்நிலைக்கு காரணமாக அமைகின்றது. மட்டுமின்றி இந்த காரணங்களை மையமாக வைத்து தங்களுடைய வாழ்வாதாரத்தையும் தங்களுடைய வருமானத்தையும் பெருக்கிக் கொள்ளக்கூடிய முதலாளிகள் பெரும் பணம் ஈட்டும் முதலைகளாக தனித்த முதலைகளாக மாறி வருகிறார்கள். இங்கிருந்து கருவாடுகளையும் எங்கிருந்து சங்குகளையும் இங்கிருந்து இறால் மற்றும் நண்டு, கடலட்டை போன்றவற்றையும் வெளிநாடுகளுக்கு மிக இலகுவாக அனுப்பி பணமீட்டும் ராஜதந்திரிகளாகவும் இவர்கள் மாறி இருக்கிறார்கள்.

இதற்கு அவர்கள் காட்டும் ஒரே ஒரு காரணம் இந்திய மீனவர்களின் அத்துமீறிய. பிரவேசம் என்பதாகவே அமைகின்றது. ஆனால் அவர்கள் இவ்வளவு காரணங்களையும் வைத்துக்கொண்டும் இவ்வளவு ஏற்றுமதிகளை செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் பிறிதொரு இலாபத்தை பெறுவதன் காரணமாகவே உள்நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தையும் ஏமாற்றுகிறார்கள். இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் உண்மையானவையே. ஆனால் அதுவே நாளாந்த அத்துமீறலாகவும் இல்லை.

இலங்கை மீனவர்களும் அத்துமீறலை எதிர்க்கும் சக்திபடைத்தவர்கள் தான். அந்த எதிர்ப்புகளை எதிர்கொண்டு அவர்கள் பிடிக்கும் மீன்களை கருவாடாகி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் இந்த கபட நடவடிக்கைகளே கண்டிக்கத்தக்கது. . இதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கம் நேரடியாக தலையிட்டு புதிய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உரமூட்ட வேண்டும். உள்நாட்டில் இருந்து கொண்டே தங்களுடைய வளங்களை நுகர முடியாத மக்களுக்கும் விடியலை ஏற்படுத்த வேண்டும்.

# வெப்ப மண்டல மழைக்காடுகள்

பூரணி
சுற்றுச்சூழல் ஆய்வாளர்

**அண்டார்டிகாவைத் தவிர ஒவ்வொரு கண்டத்திலும் மழைக்காடுகள் செழித்து வளர்கின்றன. மழைக்காடுகளின் வளமான பல்லுயிர் நம்முடைய நல்வாழ்வுக்கும் நமது கிரகத்தின் நல்வாழ்வுக்கும் நம்பமுடியாத அளவிற்கு முக்கியமானது.**

மழைக்காடுகள், பெயர் குறிப்பிடுவது போல, ஏராளமான மழையைப் பெறும் காடுகள். அவை அடிக்கடி மழையைப் பெறுகின்றன, மேலும் சதுர மீட்டருக்கு மழைப்பொழிவு சாதாரண காடுகளை விட மிக அதிகம்.

மழைக்காடுகள் மில்லியன் கணக்கான தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகளால் ஆனவை, பரிணாமம், வாழ்க்கை மற்றும் பன்முகத்தன்மையின் வீடு, இந்த சூழலில் நமது கிரகத்தின் மைய நரம்பு மண்டலங்கள்.

வெப்பமண்டல மழைக்காடுகள் உலகின் நிலப்பரப்பு பல்லுயிர் பெருக்கத்தில் 80 சதவிகிதம் உள்ளன, இவை அனைத்தும் பூமத்திய ரேகை நிலத்தின் குறுகிய துண்டுகளாக சுருக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வன சூழல் அமைப்பின் ஒரு பகுதியாக இருந்த இந்த காடுகள் மில்லியன் கணக்கான மக்களுக்கும் இடமளிக்கின்றன.



வெப்பமண்டல மழைக்காடுகள் ஒருவேளை மிகச் சிறந்தவை, மிதமான மழைக்காடுகள் சமமாக மாறுபட்டவை மற்றும் அழகாக இருக்கின்றன. ஒன்றாக, மழைக்காடுகள் உலகின் மிக அழகான, பிரமிக்க வைக்கும் இடங்கள் மற்றும் உயிரினங்களின் கேலரியை வழங்குகின்றன.

மழைக்காடுகள் பூமியின் பழமையான வாழும் சுற்றுச்சூழல் அமைப்புகளாகும், அவற்றில் சில குறைந்தது 70 மில்லியன் ஆண்டுகள் அவற்றின் தற்போதைய வடிவத்தில் வாழ்கின்றன. அவை பூமியின் மேற்பரப்பில் 6ழு மட்டுமே உள்ளடக்கியிருந்தாலும், அவை நம்பமுடியாத அளவிற்கு மாறுபட்டவை மற்றும் சிக்கலானவை, அவை உலகின் தாவர மற்றும் விலங்கு இனங்களில் பாதிக்கும் மேற்பட்டவை. இது மழைக்காடுகள் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் அடிப்படையில் வியக்கத்தக்க வகையில் அடர்த்தியாகின்றன் 10 சதுர கிலோமீட்டர் (4 சதுர மைல்) பரப்பளவில் 1.500 பூச்செடிகள், 750 மர இனங்கள், 400 பறவை இனங்கள் மற்றும் 150 பட்டாம்பூச்சி இனங்கள் இருக்கலாம்.

அண்டார்டிகாவைத் தவிர ஒவ்வொரு கண்டத்திலும் மழைக்காடுகள் செழித்து வளர்கின்றன. மழைக்காடுகளின் வளமான பல்லுயிர் நம்முடைய நல்வாழ்வுக்கும் நமது கிரகத்தின் நல்வாழ்வுக்கும் நம்பமுடியாத அளவிற்கு முக்கியமானது.

வெப்பமண்டல மழைக்காடுகளில் 30 மில்லியன் தாவர மற்றும் விலங்கு இனங்கள் வாழ்கின்றன. உலகின் தாவர இனங்களில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மழைக்காடுகளில் வளர்கிறது, இதில் பல கவர்ச்சியான மற்றும் அழகான பூக்கள் உள்ளன.

நாம் அனைவரும் நம் சொந்த வீடுகளில் பயன்படுத்தும் பல தயாரிப்புகளின் ஆதாரமாக மழைக்காடுகள் உள்ளன. மழைக்காடுகளிலிருந்து பலவகையான உணவுகளை நாங்கள் வழங்குகிறோம், மேலும் பல மருந்துகள் இந்த பிராந்தியங்களில் காணப்படும் பொருட்களிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படுகின்றன.

## பருவநிலை மாற்றத்தை தணிப்பதில் முக்கியத்துவம்

உலக மழைக்காடு தினம் அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வி கற்பதற்கும் ஈடுபடுத்துவதற்கும் ஒரு சந்தர்ப்பமாக செயல்படுகிறது. பருவநிலை மாற்றத்தைத் தணிப்பதிலும், பல்லுயிர் பெருக்கத்தை ஆதரிப்பதிலும், நீர் சுழற்சிகளை ஒழுங்குபடுத்துவதிலும், சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குவதிலும் மழைக்காடுகள் வகிக்கும் அடிப்படைப் பங்கு பற்றிய விழிப்புணர்வை இது ஏற்படுத்துகிறது. தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் ஒன்றிணைந்து இந்த விலைமதிப்பற்ற சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைக்கான அழைப்பாக இந்த நாள் செயல்படுகிறது.

பூமியின் நுரையீரல்

உலகின் தாவர மற்றும் விலங்கு இனங்களில் 50ழு முதல் 75ழு வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டு உள்ளது, அவற்றில் பல பூமியில் வேறு எங்கும் காணப்படவில்லை. மழைக்காடுகள் உலகளாவிய ஆக்ஸிஜன் உற்பத்திக்கு பங்களிக்கின்றன. வளிமண்டலத்தில் இருந்து கணிசமான அளவு கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சுகின்றன. சமச்சீரான காலநிலையை பராமரிப்பதில் அவற்றின் குறிப்பிடத்தக்க பங்கு காரணமாக மழைக்காடுகள் "பூமியின் நுரையீரல்" என்று அழைக்கப்படுகிறது.

நீரின் சுழற்சிகளை ஒழுங்குபடுத்துவதில் மழைக்காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை மழையை உறிஞ்சி படிப்படியாக வெளியிடுகின்றன, வெள்ளத்தைத் தடுக்க உதவுகின்றன மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு நிலையான நீர் விநியோகத்தை உறுதி செய்கின்றன.

# விவசாயத்துறையில் மூலோபாய மாற்றத்தின் அவசியம்



இலங்கையில், மொத்த விவசாய உற்பத்தியில் சுமார் 85மூ பங்களிப்பைக் கொண்டு, நாட்டின் உணவு விநியோகத்தில் சிறிய விவசாயிகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். குறிப்பிடத்தக்க வகையில், இந்த விவசாயிகளில் 82% பேர் பகுதி நேர விவசாயத்தில் ஈடுபட்டு, நிலையான வருமானத்தைப் பெறுவதற்காக விவசாய நடவடிக்கைகளை மற்ற வேலைகளுடன் சமநிலைப்படுத்துகின்றனர். அவர்களில், சுமார் 15மூ பேர் பால் பண்ணையை பயிர் உற்பத்தியுடன் ஒருங்கிணைக்கிறார்கள், மீதமுள்ள 3மூ பேர் தங்கள் பயிர்களுடன் கோழி, ஆடுகள் அல்லது பன்றிகளில் கவனம் செலுத்துகிறார்கள். பயிர் விவசாயத்தில் இருந்து கிடைக்கும் வருமானம் அவர்களின் ஒட்டுமொத்த வருவாயில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே உருவாக்குகிறது, இது பயிர் உற்பத்தி மற்றும் பிற விவசாய நடவடிக்கைகளின் கலவையிலிருந்து பெறப்படுகிறது.

இது இலங்கையில் சிறு விவசாயிகளின் எதிர்காலம் பற்றிய ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. 2030-க்குள், இந்த விவசாயிகளில் எத்தனை பேர் இன்னும் பயிர் உற்பத்தியில் ஈடுபடுவார்கள்? தோட்ட விவசாயத்தின் நிலப்பரப்பு இந்த சிக்கலை மேலும் சிக்கலாக்குகிறது 10 ஏக்கருக்கும் குறைவான தோட்டங்கள் அதிக உற்பத்தித் திறனைக் கொடுக்கின்றன, அதைத் தொடர்ந்து 10-20 ஏக்கர் வரம்பில் உள்ளவை. இதற்கு நேர்மாறாக, 20 ஏக்கருக்கு மேல் உள்ள பெரிய தோட்டங்கள் குறைந்த விளைச்சல் கொண்டவையாக இருக்கும். இதன் விளைவாக, 2030 ஆம் ஆண்டளவில், இலங்கையில் விவசாயம் செய்பவர்கள் உள்நாட்டில் பெறப்படும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறு விவசாயிகளை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட விவசாயத் துறையில் ஒரு மூலோபாய மாற்றத்தின் அவசரத் தேவையை இந்தச் சூழல் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இலக்கு தலையீடுகள் இல்லாமல், உள்ளூர் விவசாயத்தின் நம்பகத்தன்மை குறைந்து, உணவு பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

### வழக்கு ஆய்வு: இலங்கையில் விவசாய மாற்றங்கள்

இதேபோன்ற சவால்களை எதிர்கொள்ளும் பல்வேறு நாடுகளில் காணப்படும் படிப்படியான விவசாய மாற்றம் ஒரு பொருத்தமான சர்வதேச சூழ்நிலையாகும். உதாரணமாக, இந்தியாவில், பாரம்பரிய விவசாயத்திலிருந்து பலவகைப்பட்ட விவசாய முறைகளுக்கு மாறுவது, மாறிவரும் சந்தை தேவைகள் மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்களுக்கு பிரதிபலிப்பாகும். சிங் மற்றும் சிங் (2021) ஆகியோரின் ஆய்வின்படி, இந்தியாவில் உள்ள சிறு விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை அதிகளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர், இது பயிர் உற்பத்தியை கால்நடைகள் மற்றும் மீன்வளர்ப்புடன் இணைத்து வருமானம் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது (சிங், ஆர்., & சிங், ஏ. (2021). மூஒருங்கிணைந்த விவசாய முறைகள்: இந்தியாவில் சிறு விவசாயிகளுக்கான நிலையான அணுகுமுறை.மூ வேளாண் பொருளாதார இதழ், 72(3), 431-450).

இந்த மாற்றம் இலங்கையின் சாத்தியமான பாதையை பிரதிபலிக்கிறது, புதுமையான நடைமுறைகள் மற்றும் வளங்களை அணுகுவதன் மூலம் சிறு விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்தியாவின் வழக்கு ஒரு மதிப்புமிக்க பாடமாக விளங்குகிறது, சிறு விவசாயிகளிடையே பின்னடைவை வளர்ப்பது விவசாயத் துறையில் மேம்பட்ட உற்பத்தி மற்றும் நிலைத்தன்மைக்கு வழிவகுக்கும் என்பதை விளக்குகிறது.

முடிவாக, இலங்கையின் விவசாய எதிர்காலம் சிறிய விவசாயிகளுக்கு திறம்பட ஆதரவளிக்கும் திறனைச் சார்ந்துள்ளது. உள்ளூர் விவசாய முறைகளின் மூலோபாய வளர்ச்சி உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கு மட்டுமல்ல, உலகளாவிய சந்தை மாற்றங்களை எதிர்கொள்ளும் பொருளாதார பின்னடைவை மாற்றி அமைப்பதற்கும் அவசியம்.

# உலகின் தட்ப வெப்ப மாற்றங்கள்

**சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில், பூமியில் மட்டுமே உயிர்கள் வாழக்கூடிய ஆதாரம் உள்ளது. பூமியின் தனித்துவமான சூழல் காரணமாக படிப்படியான பரிணாம முன்னேற்றங்களைக் கண்டு உயிர் கோளம் உருவாக காரணமானது. நீர், வாயு மண்டலத்தில் பிராணவாயு மற்றும் பூமி மேற்பரப்பில் சரியான வெப்பநிலை ஆகியவை பூமியில் உயிர்கள் தோன்ற காரணமானது.**



க. அமுதன்

ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் (பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டு) ஏற்படும் பூமியின் தட்பவெப்ப நிலையின் வேறுபாடே தட்பவெப்ப மாற்றம் எனப்படும். புவி மற்றும் மண்ணியல் ரீதியாக தட்பவெப்பமாற்றம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படுகிறது. புவி வரலாற்றில் உறைபனிக் காலங்கள், இடைக்காலங்கள் என மாறி மாறி பல்வேறுபட்ட தட்பவெப்ப நிலைகள் வந்து மறைந்துள்ளன.

இத்தகைய மாற்றங்கள் அனைத்தும் புவியியல் காரணிகள் மற்றும் சூரிய ஒளிக்காற்றை மாறுதலாலும் மாறுபடுகிறது. சமீபகாலமாக புவிவெப்பமடைவது அதிகமாக இருப்பதால் புவிவாழ் உயிரினங்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. 1900ம் ஆண்டில் இருந்து இயற்கையின் செயல்பாடுகளை விட மனிதனின் இடையூறான நடவடிக்கைகள்தான் தட்பவெப்ப மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தட்பவெப்ப மாற்றத்திற்கான காரணம்

பூமியின் காலநிலையில் ஏற்படும் வெப்ப விளைவுகளுக்கு காரணம் மனிதனின் செயல்களே ஆகும். தொழிற்சாலை மற்றும் நிலக்கரி சார்ந்த தொழிற்கூடங்களிலிருந்து வெளியிடப்படும் பசுமை இல்ல வாயுக்களான மீத்தேன், கார்பன் டை ஆக்சைடு ஆகியவை காற்று மண்டலத்துடன் கலப்பதால் புவியின் வெப்பநிலையில் பெரும் மாற்றம் ஏற்படுகிறது.

கடந்த நூற்றாண்டுகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் அதிக அளவில் பசுமை இல்ல வாயுக்கள் வெளிவிடப்பட்டுள்ளதால், வளி மண்டலம் அதிக வெப்பமடைவதோடு பூமியின் வெப்ப நிலையும் உயர்ந்து புவியில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு போன்ற கற்படி எரிசக்தி மூலாதாரங்கள் கண்டறியப்படுவது, எரிப்பது, காடழித்தல், ஈரநில விவசாயம், கால்நடைகள் போன்றவை பசுமை இல்ல வாயுக்களின் மூலாதாரங்கள்.



சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில், பூமியில் மட்டுமே உயிர்கள் வாழக்கூடிய ஆதாரம் உள்ளது. பூமியின் தனித்துவமான சூழல் காரணமாக படிப்படியான பரிணாம முன்னேற்றங்களைக் கண்டு உயிர் கோளம் உருவாக காரணமானது. நீர், வாயு மண்டலத்தில் பிராணவாயு மற்றும் பூமி மேற்பரப்பில் சரியான வெப்பநிலை ஆகியவை பூமியில் உயிர்கள் தோன்ற காரணமானது.

புவியின் வாயு மண்டலத்தில் 78 சதவிகிதம் நைட்ரஜனும், 21 சதவிகிதம் பிராணவாயுவும் மற்றும் 0.036 சதவிகிதம் கரியமிலவாயுவும் உள்ளது. இவ்வாயு மண்டலம் உயிர் வாழவும் தொடரவும் முக்கியமானது. பிராணவாயு சுவாசிப்பதற்கு பயன்படுகிறது. கரியமிலவாயு தாவரங்களை ஒளிச்சேர்க்கைக்கு பயன்படுத்துவது மட்டுமல்லாது பூமியின் வெதுவெதுப்பான சூழலை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

சூரியனில் இருந்து வரும் சக்தியில் 30 சதவிகிதம் மீண்டும் வானை நோக்கி பிரதிபளிக்கப்பட்டு எஞ்சியது பூமியை அடைந்து காற்றை, கடலை, நிலத்தை மற்றும் பூமியின் மேற்பரப்பை வெதுவெதுப்பாக்கி சராசரி வெப்பநிலையை 15 டிகிரியாக இருக்க உதவுகிறது. அதேபோல் கரியமில வாயு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவை புவி பரப்பில் வெப்பத்தை மறு உமிழ்வு செய்து வெப்பநிலை உயர காரணமாகிறது.

இத்தகைய வாயுக்களை பசுமை இல்ல வாயு என்கிறோம். கரியமிலவாயு போன்ற பசுமை இல்ல வாயுக்கள் அதிகரிப்பால் வாயு மண்டலத்தில் வெப்ப நிலை அதிகரிக்கிறது. வாயு மண்டலத்தில் அதிகரிக்கும் வெப்பத்தால் உயிர் கோளத்திலும் உயிர்கள் மீதும் பல்வேறு பட்ட பாதிப்புகள் உண்டாகும்

# இலங்கையின் ஆறுகள்

மூன்றாம்பக்கத் தொடர்ச்சி....

முட்கள் போன்றவற்றைக் கொண்டு இருக்கின்றன. மேலும் நிலத்தடி நீரின் குறைவினால் நெருங்கி வளராமல் பரவித் தனித்தனியாகக் காணப்படுகின்றன.

- பாலைவனங்களில்தாவரங்களைப் போலவே விலங்கினங்களும்மிகக்குறைவு. இவை வறட்சியையும் வெப்பத்தையும் தாங்கக் கூடிய தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. இங்கு ஒட்டகம், மலை ஆடு மற்றும் ஒரு சில சிறு விலங்குகளும் வாழ்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒட்டகம் நீர் கிடைக்கும் நேரத்தில் அதிக நீரினைக் குடித்துக் கொள்ளும். இது நீர் கிடைக்காத பல நாட்களுக்கு நீரினைத் தேக்கி வைத்துக் கொள்ளக் கூடிய தன்மையைப் பெற்றுள்ளது. ஒரு சில எலிகள் வறட்சியான உணவை உண்டு வாழக் கூடியனவாக உள்ளன. ஒரு சில சிறு விலங்கினங்கள் பகலில் தன் வலைக்குள் தங்கியிருந்துவிட்டு, இரவில் மட்டும் வெளியில் வந்து உணவினைத் தேடும். இவை தங்களின் வலைக்குள் தங்குவதன் மூலம் பகல்நேர வெப்பத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்கின்றன. சிறு பூச்சி வகைகள் தங்கள் உடம்பின் மீது மெழுகுப் பூச்சினைக் கொண்டிருப்பதின் மூலம் சூரிய வெப்பத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்கின்றன.
- பாலைவனப் பகுதிகளில் மிகவும் குறைவான மக்களே வசிக்கின்றனர். அவர்கள் நிலையாக ஓரிடத்தில் தங்காமல் நாடோடி வாழ்க்கையையே மேற்கொண்டுள்ளனர். இப்பாலைவனப் பழங்குடிகளை நாம் இன்றும் சில இடங்களில் காணலாம்.
- நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு போன்றவை தொல் படிவ எரிபொருள் வளங்களாகும். எண்ணெய் வளத்தைப் பொறுத்தவரை, உலகத்தின் ஒருசில பகுதிகளில்தான் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அதே வேளையில் இவற்றின் பயன்கள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகின்றன. தொழிற் பெருக்கம்தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. தற்போது பயன்படுத்தப்படும் அளவிலேயே பயன்படுத்தப்பட்டால்கூட இருப்பிலுள்ள தொல் எரி பொருள் வளங்கள் முழுதுமாக அழிந்து விரைவில் எரிசக்திப் பற்றாக்குறையை (energy crisis) எதிர்நோக்க வேண்டி வருமென்று கூறுகின்றனர். இந்தியாவில் ஏறக்குறைய 131,000 மில்லியன் டன் வரை நிலக்கரி இருப்பதாகவும் தற்போது பயன்படுத்தப்படும் அளவிலேயே பயன்படுத்தப்பட்டால் இன்னும் 1,000 ஆண்டுகளுக்குள் முழுதும் அழிந்துவிடுமென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத எண்ணெய் தற்போதைய தேவையில் மூன்றில் ஒரு பங்குதான் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகம் முழுதிலும் 95மூ நிலக்கரி, 4மூ எண்ணெய், 1% இயற்கை வாயுக்கள் இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளன. உலகில் உள்ள மொத்த எண்ணையும், இயற்கை வாயுக்களும் இந்த நூற்றாண்டு முடிவதற்குள்ளாகவே அற்றுப்போகும் என்று கருதப்படுகிறது.
- எரிபொருள்வளத்தைப்பாதுகாத்தல்
- தொல் எரிபொருள் வளத்திற்கு மாற்றாக நீர்மின் சக்தி (hydropower), காற்றுச்சக்தி (wind power), அணுசக்தி (nuclear energy), சூரிய சக்தி (solar energy) போன்றவற்றைப்பயன்படுத்தினால் அதனை அற்றுப்போகும் நிலையிலிருந்து ஓரளவு காப்பாற்றலாம்.
- நீர்மின்சக்தி
- நீரிலிருந்து மின் உற்பத்தி செய்யும் பல திட்டங்கள் தற்போது நடைமுறையில் இருக்கின்றன. கடல் அலைகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஃபிரான்சிலும், கழிமுக நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம் இந்தியாவிலும் நடப்பில் உள்ளன.
- காற்றுச்சக்தி
- உலகின் பல பகுதிகளில் மிக ஆழமான பகுதியிலிருந்து நீரை வெளிக்கொண்டுவருவதற்கும், எந்திரங்களை இயக்குவதற்கும் காற்றாடிகளைப் (wind mills) பயன்படுத்துகின்றனர். உலகில் உண்டாக்கப்படும் மொத்த சக்தியில் 0.1 மில்லியன் மெகாவாட்தான் இப்போது கிடைக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- அணுசக்தி
- சில உலோகங்களைச் சிதைக்கும்போது பெருமளவில் ஆற்றல் வெளிப்படுகிறது. இச் சக்திக்கு அணு சக்தி என்று பெயர் ஒரு கிராம் யுரேனியம் 235 ஐச் சிதைக்கும்போது வெளிப்படும் சக்திக்கு நிகரான சக்தியைப்பெற 15 டன் நிலக்கரி எல்லாவற்றிற்கும் மேலாக இதில் நிலக்கரியையோ 14 பீப்பாய்கள் சுத்திகரிக்கப்படாத எண்ணெயையோ எரிக்க வேண்டும். யுரேனியம்-238, தோரியம்-232 கடல் நீரில் இருந்து கிடைக்கக்கூடிய டியுட்டிரியம் (deuterium) போன்ற உலோகங்கள் யுரேனியம் 235 ஐ விட மிகுந்த சக்தியைக் கொடுக் கும். இந்தியாவில் காணப்படும் பல கனிமங்களில் தோரியம் அடங்கியுள்ளது. இதைப் பயன்படுத்தி வருங்காலத்தில் ஏற்படும் சக்தி பற்றாக்குறையைப் போக்கிவிடலாமென்று அணுசக்தி அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் தாராப்பூர் (பம்பாய்), கோட்டா (இராஜஸ்தான்), கல்பாக்கம் (தமிழ்நாடு) போன்ற இடங்களில் அணுமின்நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.
- சூரியசக்தி
- சூரிய சக்தியின் மூலம் உணவு சமைத்தல், நீரைச் சூடாக்குதல், தானியங்களை உலர்த்துதல், சில எந்திரங்களை இயக்குதல் போன்ற பல செயல்கள் நடைபெறுகின்றன. தொல் எரிபொருள்கள் எரியும்போது நைட்ரஜன், கார்பன், கந்தகம் போன்றவற்றின் ஆக்ஸைடுகள் வெளிப்படுகின்றன. இவை வளி மண்டலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. இதேபோல் அணுசக்தியை உண்டாக்கும் போதும் சில கேடுபயக்கும் பொருள்கள் வெளிப்பட்டு வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. ஆனால் புதுப்பிக்கக்கூடிய காற்று, நீர், சூரிய வளங்களால் எவ்வித நிலையான கேடுகளும், சிக்கல்களும் ஏற்படுவதில்லை. எனவே இச்சக்தியைப் பயன்படுத்தி சூழ்நிலை கேடுறுவதைத் தடுக்கலாம்.
- மக்கள் சமைப்பதற்கும் எரிப்பதற்கும் விறகுகளையும், காய்ந்த மாட்டுச் சாணத்தையும் எரிபொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர். மாட்டுச் சாணத்தை எரிபொருளாகப் பயன்படுத்துவதால் தாவரங்களுக்குத் தேவையான இயற்கை உரம் கிடைக்காமல் போய்விடுகிறது. இக்குறையைப் போக்கச் சாண எரிவாயுக் கலன்களை (gobar gas plants) அமைத்து, மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்திச் சாண எரிவாயுவை (biogas or gobar gas) உண்டாக்கி, விளக்கு எரிப்பதற்கும், சமைப்பதற்கும், பொருள்களைச் சூடாக்குவதற்கும் பயன்படுத்தலாம். இதனால் எரிபொருள் செலவு குறைந்து விடும். தூய்மைக் கேடுகளும் இல்லை. மேலும் விறகுகளுக்காகக் காடுகளை அழிப்பதும் தவிர்க்கப்படுகிறது. பயன்படுத்தப்படும் சாணத்தைப் பயிர்களுக்குத் தேவையான உரமாகவும் பயன்படுத்தலாம்.

# இயற்கை மாசுபாடுகளினால் ஏற்படும் விளைவுகள்



காற்று மாசடைதலினால் கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல் மற்றும் புற்றுநோய் போன்ற பல நோய்களை ஏற்படுகின்றது. தொழிற்சாலைகளும், வாகனங்களும் ஏற்படுத்தும் புகையினால் தாவரங்கள், நிலம், நீர், நினைவுச் சின்னங்கள் மற்றும் கட்டிடங்கள் முதலியவை பாதிக்கப்படுகின்றன.

அமில மழை- தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கந்தகம் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற வாயுக்களால் ஏற்படுகிற அமிலமழை, மண்ணின் அமிலத் தன்மையை அதிகப்படுத்துவது மட்டும் அல்லாமல் தாவரங்கள் இலைகளை உதிர்த்தல், குளம் மற்றும் ஆறுகளில் உள்ள நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுதல் முதலிய பாதிப்புக்களும் காரணமாகிறது.

ஓசோன் படலம்-வாயுமண்டலத்தின் ஸ்ரடோஸ்பியரிலுள்ள ஓசோன் படலம் சூரியனிலிருந்து வருகிற ஆபத்தான புற ஊதாக்கதிர்களை தடைசெய்கிறது. அதிகவேக விமானங்கள் (சூப்பர் சானிக்) வெளியிடும் அதிகப்படியான நைட்ரஜன் ஆக்ஸைடுகளும், குளிர்சாதனப் பெட்டி, தீயணைப்பான் போன்றவற்றிலிருந்து வெளிவரும் க்ளோரோப்ஃபளோரோ கார்பன்களும் ஓசோன் படலத்தை சிதைக்கிறது. இதன் விளைவாக மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தோல் புற்றுநோய் ஏற்படுகிறது.

வாகனங்கள் - மனிதனின் கண்டுபிடிப்பான வாகனங்கள் நம்மிடம் உள்ள எண்ணெய் சேமிப்பை குறைத்து வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை (கார்பன் மோனா ஆக்ஸைடு) (நைட்ரஜன்) ஆக்ஸைட்டு மற்றும் பிற வாயுகள் காற்றை மாசுபடுத்திகிறது. இவை, சூரிய கதிர்களுடன் இணைந்து ஒளிவேதி நச்சுப்புகை படலத்தை ஏற்படுத்துகிறது, இது நகரங்களில் பெரிதும் பாதிக்கின்றன.

தொழிற்சாலை மற்றும் வாகனங்களில் இருந்து வெளியேறும் வாயுக்களோ வளிமண்டலத்தில் அமிலத்தன்மையை ஏற்படுத்துக்கின்றது. இது அமில மழையாக உற்பத்தியாகிறது. இதனால் நிலத்தடி நீர் மாசுடைகின்றது.

ஒலிச் சீர்கேடு- ஒலிச்சீர்கேடு நகரங்களில் பாதிப்புக்களை அதிகபடுத்துகிறது. வாகனங்களின் சத்தம், ஒலிப்பெருக்கி ஏற்படுத்தும் இரைச்சல், பொருட்களை விற்போர் கூச்சல், இயந்திரம் ஏற்படுத்தும் உராய்வு சத்தம் போன்றவை மனகவலை, மன அழுத்தம், தலைவலி மற்றும் காது கோளான்மையை ஏற்படுத்துகிறது.

எரிமலை வெடிப்பது பூமியில் நடக்கக்கூடிய அற்புத புவியியல் நிகழ்ச்சியாகும். பூமியானது உட்கரு, மையப்பகுதி ,நடுப்பகுதி, புறப்பகுதி என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புவியின் மேற்பரப்பிலிருந்து வரும் தொடர் அழுத்தத்தினால் மையப்பகுதியின் வெப்பநிலை எப்பொழுதும் மிக அதிகமாகவே இருக்கும். இவ்வெப்பமானது அதனை அடுத்த நடுப்பகுதியிலுள்ள பாறைப் பகுதியில் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்துவதால் இக்கடினப்பாறைகள் உருகி குழம்பாக மாறுகின்றது. இது பாறைக் குழம்பு அல்லது மேஃமா என அழைக்கப்படுகிறது. இதன் அளவு அதிகரிப்பதாலும், இச்செயல்பாடுகளினால் உருவாகும் வாயுக்களால் ஏற்படும் அழுத்தத்தினாலும் பாறைக்குழம்பானது புவியின் மேற்பரப்பைத் துளைத்துக் கொண்டு பீரிட்டு வெளியேறுவது எரிமலை என அழைக்கப்படுகிறது. இவ்வாறாக புவியின் உட்பகுதியிலிருந்து மேற்பரப்பில் பரவும் பாறைக்குழம்பு லாவா என அழைக்கப்படுகிறது. சில சமயங்களில் இந்த லாவா எரிமலையின் வாய் பகுதியிலே குளிர்ந்து அடைப்பை ஏற்படுத்திவிடும். இவ்வகை எரிமலை மீண்டும் வெடிக்கும் போது பாறைக் குழம்பு ஊற்றுப்போல பொங்கி எழும் வாய்ப்புள்ளது. இப்பாறைக் குழம்பானது உடைந்த பாறைக் கற்கள் மற்றும் சாம்பலையும் கொண்டிருப்பதால் அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

எரிமலைகளின் வகைகள்

- உயிருள்ள எரிமலைகள்: குறிப்பிட்ட கால இடைவெளியில் வெடித்து சிதறும் எரிமலைகள்.
- தூங்கும் எரிமலைகள்: நீண்ட காலமாக அமைதியாக இருப்பவை. ஆனால் எந்த நேரத்திலும் பாறைக் குழம்பை கக்கும் தன்மையுடையவை.
- இறந்த எரிமலைகள்: மிகப் பழமையானவை. மீண்டும் உயிர்பெற வாய்ப்பில்லை என உறுதி செய்யப்பட்டவை.


உலகிலுள்ள உயிருள்ள எரிமலை பகுதிகள்

எரிவளையம் என அழைக்கப்படும் பசிபிக் மகா சமுத்திரத்தின் விளிம்புப் பகுதிகளில் அமைந்துள்ள ஜப்பான், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, நியூகினியா, நியூசிலாந்து, சிலி, பெரு, ஈக்குவடார், கொலம்பியா ஆகிய நாடுகள் அதிக பாதிப்பான பகுதியில் அமைந்துள்ளன.

மத்திய தரைக்கடல் பகுதி மற்றும் மத்திய கிழக்கு இத்தாலி, கிரேக்கம், துருக்கி, ஈரான், சவுதி அரேபியா, ஏமன் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை எரிமலைகளால் ஏற்படும் மறைமுக பாதிப்பு பகுதியில் உள்ளன.

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பெரிய பிளவு பள்ளத்தாக்கில் அதிக எண்ணிக்கையிலான எரிமலைகள் எத்தியோபியா மற்றும் கென்யாவில் காணப்படுகின்றன.

வட அமெரிக்காவின் மேற்குப் பகுதி




நாடுகளான கலிஃபோர்னியா, ஓரிகான், வாஷிங்டன், பிரிட்டிஷ் கொலம்பியா, யூகான், அலாஸ்கா, பாஜா கலிஃபோர்னியா ஆகிய நாடுகளிலும் உயிருள்ள எரிமலைகள் காணப்படுகின்றன.

பெருங்கடல்களின் மேற்பரப்பில் கிடையாக நகருகின்ற கடல்நீரை நீரோட்டங்கள் என அழைக்கலாம். நீர்ப்பரப்பின் மேலே வீசுகின்ற காற்று பெருங்கடல்களில் நீரோட்டங்களை நகர்த்துகின்றன. பெருங்கடல் பரப்பின் மீது காற்று வீசும்பொழுது உராய்வு ஏற்படுகிறது. இந்த உராய்வின் காரணமாகக் காற்று வீசுகின்ற திசையில் நீரும் நகர்த்தப்படுகிறது. நீரோட்டங்கள் மிகப்பெரிய அளவில் பெருங்கடல்களில் தோன்றுவதற்கு முக்கியக் காரணி வளிமண்டலமாகும். இந்நீரோட்டங்கள் வெப்ப மண்டலத்திலிருந்து துருவ மண்டலத்திற்கு வளி மண்டலத்தின் வெப்ப ஆற்றலை எடுத்து செல்கின்றன. நீரோட்டங்களில் சில சிறிய அளவில் தோன்றுகின்றன, பாதிப்புகளும் குறைந்த அளவிலேயே இருக்கின்றன. பிற நீரோட்டங்கள் நிரந்தரமாகவும் கிடையாக வெகு தூரத்திற்கு மிகப் பெரிய அளவிலும் பரவிக் காணப்படுகின்றன.

மூன்று பெருங்கடல்களுக்கும் கண்டங்கள் எல்லைகளாக அமைந்திருக்கின்றன. இவை நீரோட்டங்களின் பாதைகளில் தடைகளாக அமைவது மட்டுமன்றி அந்நீரோட்டங்கள் ஏறக்குறைய வட்டவடிவில் சுழலவும் காரணமாக அமைகின்றன. இத்தகைய சுழல் தோற்றங்களை பெருங்கடல் சுழல்கள் (Ocean gyres) என அழைக்கிறோம். துணைவெப்பமண்டலப் பகுதிகளில் 30° வடக்கு மற்றும் தெற்கு அட்சக்கோடுகளில் அமைந்துள்ள பெருங்கடல் ஒவ்வொன்றிலும் ஓர் சுழல் பெரிய அளவில் அமைந்துள்ளது. இத்தகைய சுழல் நீரோட்டங்களை துணைவெப்பமண்டல உயர் அழுத்தத்திலிருந்து வீசுகின்ற காற்று கட்டுப்படுத்துகிறது. 50° வடக்கு அட்சக்கோடுகளில் அமைந்துள்ள வட அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல் பரப்புகளில் சுழல்கள் சிறிய அளவில் உருவாகின்றன. இச்சுழல் நீரோட்டங்களை உயர் அழுத்த மையத்திலிருந்து வீசுகின்ற காற்று கட்டுப்படுத்துகிறது. இத்தகைய சுழல்தொகுதிகள் தென்அரைக்கோளத்தில் பெரிய அளவில் அமையவில்லை. ஏனெனில் இத்தகைய சுழல்களை தோற்றுவிக்கின்ற நிலப்பரப்பு குறைவாக உள்ளது.

ஒரு சுழலில் நான்கு நீரோட்டங்கள் அமைந்துள்ளன. கிழக்கு-மேற்காக இரண்டு நீரோட்டங்கள் முறையாக சுழலின் மேல் மற்றும் கீழ்பகுதிகளில் அமைந்துள்ளன: கண்ட எல்லைகளுக்கு இணையாக வடக்கு-தெற்காக இரண்டு எல்லை நீரோட்டங்களும் அமைந்துள்ளன. இந்த நீரோட்டங்கள் பாய்கின்ற திசைகளை மிகப் பெரிய அளவில் வீசுகின்ற காற்றுச்சுழற்சிகள் நிர்ணயிக்கின்றன. உலகளவில் அட்சக்கோடுகளின் இடையே வெப்ப ஆற்றல் பரவலுக்கு எல்லை நீரோட்டங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. வட அரைக்கோளத்தில் இரண்டு சுழல்களும் தென் அரைக்கோளத்தில் மூன்று சுழல்களும் காணப்படுகின்றன.

வட அட்லாண்டிக் பெருங்கடல் சுழலை எடுத்துக்காட்டாகக் கொண்டு ஓர் சுழலின் அமைப்பு எவ்வாறு உள்ளது என்று புரிந்து கொள்வோம். வட அட்லாண்டிக் சுழலில் நான்கு நீரோட்டங்கள் அமைந்துள்ளன.

அவையாவன:

1. வட நிலநடுக்கோட்டு நீரோட்டம்
2. கல்ப் நீரோட்டம்
3. வட அட்லாண்டிக் நீர்ப்பிரிவு
4. கானரீஸ் நீரோட்டம்

இவ்வாறு நீரோட்டங்கள் பற்றி நாம் விளக்கமாக அவதானித்து கொள்ள முடியும்

# பணியிடத்தில் மன அழுத்தம் ஏன்?

ஆதிரா

**மன அழுத்தம் ஏற்படும்போது இதயத் துடிப்பு அதிகரிப்பது, ரத்த அழுத்த உயர்வு, நெஞ்சு வலி, உடல் வலி, தலை வலி, தலைச் சுற்றல், அசதி, நடுக்கம், அஜீரணம் போன்ற பல்வேறு வகையான உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டு, இறுதியில் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, வேறு சில கூடுதல் நோய்களும் ஏற்படுவதற்குகூட வழிவகுத்துவிடும்.**



“நான் ரொம்ப மன அழுத்தத்தில் இருக்கேன் எனக்கு ஸ்ட்ரெஸ் (Stress) அதிகமா இருக்கு…” என்கிற வார்த்தைகள் தற்போது அனைவராலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருவது வாடிக்கை யாகிவிட்டது. முன்பெல்லாம் மிகுந்த பணி நெருக்கடியால் மன அழுத்தம் ஏற்படும். இப்போதெல்லாம் மன அழுத்தத்துடன்தான் பணிச் சூழலில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் பலருக்கும் இருக்கிறது. இப்படி எல்லோரும் தெரிவிக்கும் மன அழுத்தம் என்றால் என்ன, அது எப்படி வருகிறது?

### மன அழுத்தம் என்பது.

உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப்படி, மன அழுத்தம் என்பது ஒருவித மனநிலை. நம்முடைய கவலைகள், பதற்றம் போன்றவை ஏற்படுத்தும் ஒரு சூழலுக்கு, சரியான பதிலை, எதிர் வினையை ஆற்ற இயலாத மனித மனதின் பதில் வெளிப்பாடே மன அழுத்தம் ஆகும்.

உதாரணமாக, திடீரென நமக்கு ஏற்படும் புதிய சவால், அச்சுறுத்தல், பிரச்னை போன்றவற்றுக்கு எதிர்வினையாற்ற இயலாத நமது மனதின் எதிர்வினையே மன அழுத்தம்.

இந்த மன அழுத்தம் என்பது எல்லோருக்குமே, எப்போதாவது, ஏதாவது ஒரு சூழலில் ஏற்படவே செய்கிறது. இதை எவ்வாறு எதிர்கொள்வது? நம்முடைய மனநலன், உடல் நலனுக்குத் தீங்கு ஏற்படுத்தாதபடி, எப்படிக் கையாள்வது?

அதற்கு முதலில் எத்தனை வகையான மன அழுத்தம் உள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

### 1. கடுமையான மன அழுத்தம் (Acute stress)

இது குறுகிய காலம் ஏற்படக்கூடியது. இது சீக்கிரத்தில் வந்துவிட்டு, சீக்கிரமாகவே சென்றுவிடக்கூடியது. இது நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ கூட வரும். இது ராட்சத ரோலர் கோஸ்டரில் செல்லும்போது ஏற்படுமே… அது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தும். நெருங்கிய உறவினர்களிடம் ஏற்படும் சிறுசண்டை போன்ற சிறு சிறு காரணங்கள்தான் இந்த வகையான மன அழுத்தம் ஏற்படக் காரணமாகும்.

### 2. விட்டுவிட்டு தொடர்ச்சியாக ஏற்படும் கடும் மன அழுத்தம் (Episodic acute stress)

இந்த வகை மன அழுத்தம் விட்டு விட்டு, ஆனால் தொடர்ச்சியாக ஏற்படும் மன அழுத்தம் ஆகும். அதாவது, எப்போது நம் மனம், மன அழுத்தத்தில் இருந்து மீண்டு இயல்பு நிலைக்கு வருமோ, அப்போது மீண்டும் அதே மன அழுத்தம் அதே வேகத்தில் வந்து தொற்றிக்கொள்ளும்.

உதாரணமாக, மருத்துவத் துறையில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் தங்கள் மருத்துவமனைக்கு வரும் நோயாளியின் உயிரைக் காக்கப் பணிபுரியும்போது, கடும் மன அழுத்தத்துடன் பணிபுரிவார்கள். அந்த நோயாளி அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டார் என சற்று மன அழுத்தத்தில் இருந்து இயல்பு நிலைக்குத் திரும்பும் போது, மற்றொரு நோயாளி உயிருக்கு ஆபத்தான நிலையில் சேர்க்கப்படும்போது, மருத்துவர்கள், செவிலியர்கள் உடனடியாக மீண்டும் அதே அளவுக்கு மன அழுத்தத்துக்கு ஆளாவார்கள். எனவேதான், இது விட்டுவிட்டு, தொடர்ச்சியாக ஏற்படும் கடும் மன அழுத்தம் எனப்படுகிறது.


### 3. நாள்பட்ட மனஅழுத்தம்

இது நீண்ட நாள்களாக தொடர்ச்சியாக இருக்கும் மன அழுத்தம் ஆகும். இது நாள் கணக்கில், மாதக்கணக்கில் தொடரும். திருமணத்தின் போது, பணிபுரியும் சூழல் நெருக்கடிகளால், பொருளாதாரச் சிக்கல்களால் ஏற்படும் இத்தகைய மன அழுத்தம்தான் மிக மோசமானது. இது மன, உடல் நலனில் கடும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. இதற்கு கூடுதல் கவனம் எடுத்து மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியமாகும்.

மன அழுத்தம் ஏற்பட்டுள்ளதை சில அறிகுறிகள் மூலம் அறிந்துகொள்ளலாம். அந்த அறிகுறிகளை பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

### உடல் ரீதியான அறிகுறிகள்

மன அழுத்தம் ஏற்படும்போது இதயத் துடிப்பு அதிகரிப்பது, ரத்த அழுத்த உயர்வு, நெஞ்சு வலி, உடல் வலி, தலை வலி, தலைச் சுற்றல், அசதி, நடுக்கம், அஜீரணம் போன்ற பல்வேறு வகையான உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டு, இறுதியில் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, வேறு சில கூடுதல் நோய்களும் ஏற்படுவதற்குகூட வழிவகுத்துவிடும்.




### உளவியல் ரீதியான அறிகுறிகள்...

மன அழுத்தத்தின் உளவியல் ரீதியான அறிகுறிகளாக தேவையற்ற கவலை, மனக் குழப்பம், மனக் கலக்கம், மனச் சோர்வு, மனப் போராட்டம், அடிக்கடி எரிச்சல்படுதல், கோபப்படுதல், தனிமையுணர்வு, சோகமாக இருத்தல், அச்ச உணர்வு போன்றவற்றைச் சொல்லலாம்

### பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள்...

மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பழக்கவழக்கங்களில் திடீரென மாற்றங்கள் ஏற்படத் தொடங்கும். சிலர் மிக அதிகமாக சாப்பிடத் தொடங்குவார்கள். சிலர் அதிக மாகத் தூங்கத் தொடங்குவார்கள். சிலரோ புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற போதைப் பழக்கங்களில் சிக்கிக்கொள்வார்கள். சிலரோ வீடியோ கேம், சூதாட்டம் போன்ற வற்றுக்கு அடிமையாவார்கள். சிலர் பொறுப்புகளில் இருந்து ஒதுங்கி, வேலைகளைத் தள்ளிப் போடுவார்கள். சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழத் தொடங்குவார்கள் என அவர்களின் பழக்கவழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங் களை வைத்தே அவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகி இருப்பதைக் கண்டறியலாம்.

இவை எல்லாம் பொதுவானவை. இனி, பணி தொடர்பான மன அழுத்தம் ஏற்படுத்தும் காரணிகள் என்னென்ன எனப் பார்ப்போம்.

ஒரே வேலையைத் தொடர்ச்சியாக, ஒரே மாதிரியாகச் செய்வதாலும், அதிக வேலைப் பளு மற்றும் அதிகப்படியான பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதாலும் மன அழுத்தம் ஏற்படலாம். நாம் பணிபுரியும் இடத்தில் நிறுவனத்தில் திடீரென ஏற்படும் புதிய மாற்றங்கள் கூட மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணியை முடிக்கச் சொல்லி அளிக்கப்பட்டுள்ள காலக்கெடு அல்லது டெட் லைன் அல்லது அந்த டெட்லைன் நேரத்தில் நாம் பரபரப்பாகச் செய்யும் இறுதிக் கட்ட வேலைகள்கூட நம் மன அழுத்தத்தை அதிகப்படுத்தலாம்.

நிறுவனத்தில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்துவந்த பொறுப்பில் இருந்து திடீரென வேறு துறையில் வேறு பொறுப்புக்கு மாற்றுவதன் மூலமும், பணி நிரந்தரமின்மை, பணிப் பாதுகாப்பின்மை, சுவாரஸ்யமில்லாத ஒரே வேலையை நீண்ட காலமாகச் செய்வதும் மன அழுத்தத்துக்கு வழி வகுக்கும். சில நேரங்களில் வழங்கப்பட்டுள்ள வேலையை முடிக்கும் அளவுக்கு நம் திறமையின்மை கூட மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.

‘Micro Management or Over Supervising’ எனப்படும் பணிபுரியும் இடத்தில் நம் உயரதிகாரிகள் நம்மை தொடர்ச்சியாக அருகிலேயே அமர்ந்து, கண்கொத்திப் பாம்பாக நமது வேலைகளைக் கண்காணிப்பதும் கடும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும். நமக்கு அளிக்கப்பட்டுள்ள வேலையை செவ்வனே செய்யத் தேவையான ஆள் பலம், மூலப் பொருள்கள் பற்றாக்குறை, பணத் தேவை, கணினி மென்பொருள்கள் தேவை எனப் பல்வேறு தேவைகள் கிடைக்காததால், பணியை மேற்கொள்ள இயலாமல் மன அழுத்தம் ஏற்படலாம்.

நாம் கடினமாக வேலை செய்து, நிறுவனத்தின் வளர்ச்சிக்கு எவ்வளவுதான் பாடுபட்டாலும், நமக்குத் தேவையான வளர்ச்சியோ அல்லது பதவி உயர்வோ கிடைக்காது என்னும் நிலை ஏற்படும்போது கடும் மன அழுத்தம் ஏற்படுகிறது. பணிபுரியும் இடத்தில் சில நேரங்களில் நடைபெறும் வேறுபாடுகள் - புறக்கணிப்புகள் தொடர்பான தொல்லைகள், பாகுபாடுகள் தாங்க முடியாத அளவுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

பணிபுரியும் இடத்தில் உள்ள மேலதிகாரிகள், உடன் பணிபுரியும் சக தோழர்கள், வேறு துறை நண்பர்கள் என அலுவலகத்தில் உள்ள உறவு முறைகளில் ஏற்படும் விரிசல்கள் கூட மன அழுத்தத்தை உருவாக்கும். நம்மோடு பணி புரிந்த நண்பரின் திடீர் மரணம், திடீர் வேலை மாற்றம், வேறு துறைக்கு மாற்றப்படுதல் என அலுவலகத்தில் நிகழும் சில சம்பவங்களும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணியாகும்.



# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2024இல் வெளியிடப்பெற்றது.